பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 02 திங்கட்கிழமை 16.05.2022 கதிர் 192

இது ரகசியம் அல்ல!

அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை, பகைவர்களும் இல்லை என்பார்கள்.

நல்லாட்சி அரசில் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிக்கும் பிரதமராக இருந்த ரணிலுக்கும் இடையில் இருந்த எதிரி தன்மை - அரசியல் பகை ☞2

# முன்னாள் மொட்டுக் கூட்டினரும் ரணிலின் அரசை ஆதரிக்க முடிவு

## இன்று அவரைச் சந்திக்கத் தீர்மானம்



கொழும்பு, மே 16

சிறிலங்கா பொதுஜன பெரமுன (மொட்டு) கூட்டிலிருந்து அண்மையில் வெளியேறி தனி அணியாக இயங்கும் பத்துக் கட்சிகள், நான்கு சுயாதீனக் குழுக்கள் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவை நாட்டின் பொருளாதார நலனுக்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சரியான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க முடிவு செய்துள்ளன. ☞2

## ஆயிரத்துக்கும் அதிக பொலிஸார் தலைநகர் கொழும்புக்கு அழைப்பு

### முப்படையினரும் பெரும் எண்ணிக்கையில் குவிப்பு

கொழும்பு, மே 16

நாளை 17ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரையான காலப்பகுதியில், விசேட கடமைகளுக்காக வெளி மாகாணங்களில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முப்படையினரும் கூட பெரும் எண்ணிக்கையில் தலை நகரில் குவிக்கப்பட்டிருக்கின்றனர் என ☞2

## 55 அரசியல் பிரமுகர்களின் வீடுகள் வன்முறையில் நாசம்

### இரு நூறுக்கும் அதிக வாகனங்கள் சேதம்

நாடளாவிய ரீதியில் கடந்த 9ஆம் மற்றும் 10ஆம் திகதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது ஆர்ப்பாட்டக்காரர்களால் சுமார் 55 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்களின் வீடுகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன எனவும், 200 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன எனவும் தெரியவந்துள்ளது.

இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ☞2

### புலிகள் புதனன்று தாக்குவர் என்ற

## ‘த ஹிந்து’ செய்தி தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு விளக்கம்

முள்ளிவாய்க்கால் நினைவு தினமான மே 18ஆம் திகதி (புதனன்று) முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிகளால் இலங்கை மீது தாக்குதல் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக இந்தியப் புலனாய்வு அமைப்புக்கள் எச்சரித்துள்ளன என இந்தியாவிலிருந்து வெளியாகும் ’த ஹிந்து’ பத்திரிகையில் வெளியாகிய செய்தி தொடர்பில் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு விளக்கம் அளித்துள்ளது.

இது தொடர்பில் ☞12

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ரணிலுக்கு ஓர் அக்கினிப் பரீட்சை

### தமிழ்த் தேசியக் கட்சி தெரிவிப்பு



முள்ளிவாய்க்கால் நினை வஞ்சலி என்பது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஓர் அக்கினிப் பரீட்சையாகவே இருக்கும். அதில் அவர் தேறுவதோ அல்லது தவறுவதோ தமிழ் மக்களின் அரசியற் சிந்தனைகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியே தீரும் என முள்ளி வாய்க்கால் நினைவு தினம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி ந.சிறீகாந்தா விடுத்துள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ள ☞12

## அமைச்சர் பதவியை விரும்பினாரா விக்கி?

### நேற்று அவரே விளக்கம்

(ந.லோகதயாளன்)

யாழ்பாணம், மே.16

அமைச்சர் பதவி எதிர்பார்த்தாரா யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்? இது குறித்த தெளிவுபடுத்தலை அவர் நேற்று வழங்கினார். ☞12



## உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி இரண்டுடனும் பிரதமர் நேற்றுப் பேச்சு!

### அத்தியாவசியப் பொருள்களுக்கு உதவி கிட்டும்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடல்களை ☞12

## மக்கள் முன்னணி ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் ஊர்திப்பவனி




(கலையமுதன்)

யாழ்ப்பாணம், மே 16

தமிழினப் படுகொலையைச் சித்திரிக்கும் விதமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து ஊர்திப்பவனியொன்று ஆரம்பமாகியது.

முள்ளிவாய்க்கால் இனப் படுகொலை வாரம் தற்போது இடம்பெற்றுவரும் நிலையில் இந்த ஊர்திப்பவனி ☞2

## பிரதமர் ரணில் மக்களுக்கு இன்று உரை

இலங்கையின் புதிய பிரதமராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டு பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க இன்று நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றவுள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார ☞2

## வடமராட்சியில் நேற்று நினைவேந்தல் நிகழ்வு



இறுதிப் போரில் உயிர் நீத்த தமிழ் உறவுகளை நினைவேந்தும் ‘முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்’ வார நிகழ்வு யாழ்., வடமராட்சி, பருத்தித்துறை – முனைப் பகுதியில் நடைபெற்றது.

இலங்கைத் ☞12

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முரண்பாடு – பிரசித்தம். இனி வாழ்க்கைக் காலம் முழுவதும் நிரந்தர எதிரிகளாகவே இருப்பர் என்பது போலவே பதவிகளில் இருந்து இருவரும் இறங்கினர்.

இப்போது பிரதமர் பதவியை ஏற்றிருக்கும் ரணில், ஏற்கனவே அரசுத் தரப்பிலிருந்து வெளியேறி வெளியே நிற்கும் மைத்திரியின் கட்சியிடம் ஆதரவு கேட்டு மைத்திரிக்குக் கடிதம் எழுதுகின்றார். ஆதரவு தரலாம் என்று மைத்திரி பதில் தருகிறார்.

ஒரு காலத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் அமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்தவர் மைத்திரி. பின்னர் தாம் ஜனாதிபதியாக இருந்த போதும் பின்கதவால் மஹிந்தரை பிரதமராக்கினார். அப்போது மைத்திரிக்கு முன்னால் மஹிந்த ராஜபக்ஷ சத்தியப் பிரமாணம் செய்யும் நிலை.

அச்சமயத்தில் இனிமேல் எனக்கு முன்னால் ரணிலை பிரதமராக சத்தியப் பிரமாணம் செய்து வைக்கவே மாட்டேன் என்று சூளுரைத்தார் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. ஆனால் சில வாரங்களில் வேறு வழியின்றி ரணிலைப் பிரதமராகச் சத்தியபிரமாணம் செய்து வைக்க வேண்டியவரானார். அன்று ரணிலுக்கு முன்னால் ஜனாதிபதியாக நின்று அவருக்குப் பிரதமர் பதவிப் பிரமாணம் செய்து வைத்த மைத்திரி, இப்போது புதிய அரசில் பிரதமர் ரணிலின் கீழ் ஓர் அமைச்சராகச் சத்தியபிரமாணம் செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இப்படியான நிலை மாற்றத்திற்கு இந்திய அரசியல்வாதிகள் இருவர் நல்ல உதாரணம். ஒருவர் – பிரணாப் முகர்ஜி. மற்றவர் – மன்மோகன்சிங்.

பிரணாப் முகர்ஜி நிதி மந்திரியாக இருந்தபோது அவரின் கீழ் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் மன்மோகன்சிங். பின்னர் ஓய்வு பெற்ற மன்மோகன் சிங்கை மந்திரியாக்கி பிரணாப் முகர்ஜிக்கு சமதையாக்கினார் சோனியா காந்தி.

திடீரென மன்மோகன் சிங் பிரதமர் ஆனார். அவரின் கீழ் ஓர் அமைச்சராகப் பதவி ஏற்க வேண்டியவரானார் பிரணாப் முகர்ஜி.

சிலகாலம் செல்ல அதிரடியாக பிரணாப் முகர்ஜி ஜனாதிபதியாகப் பதவி யேற்கும் வாய்ப்புக் கிட்டியது. மீண்டும் அவருக்குக் கீழ் ஒரு பதவி நிலைக்கு வந்தார் பிரதமர் மன்மோகன் சிங்.

இப்படி அவர்கள் இருவரும் மாறி மாறி ஒருவருக்கு மேல் ஒருவர் மேல் நிலைக்கு வந்தமை பலராலும் கவனிக்கப்பட்டது.

அப்படித்தான் இலங்கையின் அரசியலிலும் விடயங்கள் பலமுறை நடக்கின்றன.

★ ★ ★

நாளை நாடாளுமன்ற அமர்வு வலுசூடாக இருக்கும். நாடு உள்ள கொந்தளிப்பு நிலையில் ஆளும் தரப்பு எம்.பிக்கள் எல்லோரும் சபைக்கு வருவார்களா என்பது சந்தேகம்தான்.

ஆனாலும் இரண்டு முக்கிய விடயங்களில் நாளை சபையில் வாக்கெடுப்பு நடக்க இருக்கின்றது. ஒன்று – புதிய பிரதி சபாநாயகரைத் தெரிவு செய்யும் தேர்வு.

அடுத்தது – ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் எதிரணி கொண்டுவந்துள்ள பிரேரணை. முதலில் இந்தப் பிரேரணையை நாளையே நாடாளுமன்றத்தில் எடுப்பதற்கு வசதியாக நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளை இடைநிறுத்தும் பிரேரணை மீதான வாக்களிப்பு நடக்கும். அதில் எதிரணி வெற்றி பெறுமானால் மேற்படி ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு அதிருப்தி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதமும் அதைத் தொடர்ந்து அதன் மீதான வாக்கெடுப்பும் நடைபெறும்.

இந்த வாக்கெடுப்புகளில் ஆளும் தரப்பை வெற்றிபெறச் செய்வதற்காக ஆளும் தரப்பின் எம்.பிக்கள் அனைவரையும் நாடாளுமன்றுக்கு நாளை அழைத்து வர வேண்டிய கட்டாயம் அரசு தரப்புக்கு. ஆனால் ஏற்கனவே மொட்டுக் கட்சியின் கூட்டிலிருந்து வெளியேறிய பல்வேறு தரப்புகள் இப்போது ரணிலின் அரசுக்கு ஆதரவு தரப் பச்சைக்கொடி காட்டி நிற்கின்றன. அப்படி ஒரு நிலைமை ஏற்படுமானால், நாளைய நாடாளுமன்ற அமர்வில் ஆளும் தரப்பின் பெரும்பான்மை கொடிகட்டி பறக்கும். இல்லையேல் போட்டி கடுமையாக இருக்கும்.

போட்டி இருக்கலாம் என்பதால் ராஜபக்ஷக்கள் கூட நாளை நாடாளுமன்றத்துக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் தங்கியுள்ள முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேரடியாகக் ஹெலிக்கொப்டரில் நாடாளுமன்ற வளாகத்தில் வந்து இறங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அவர் கொழும்புக்கு வந்தால் இன்றைய நிலையில் முன்னர் மாதிரி அலரி மாளிகைக்குப் போக முடியாது. அதனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது பாவனைக்கு எடுத்து விட்டார். அதேநேரம் கொழும்பு விஜயராம மாவத்தையில் உள்ள மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்திலும் சில கட்டுமான சீர்திருத்த நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன எனத் தெரிகின்றது. அதனாலும் அங்கும் அவர் சென்று தங்க முடியாது. சில சமயங்களில் தனது பிள்ளைகளின் கொழும்பு வீடுகளில் ஒன்றில் அவர் தங்கக் கூடும். அப்படி அவர் தங்கினால் அந்த வீட்டுக்கு உச்சப்பட்ச பாதுகாப்பு போடுவார்கள் என்பது எதிர்பார்க்கக் கூடிய ஒன்றுதானே.

இதேசமயம் எதிரணியினரும் வாக்களிப்புக்காகத் தங்கள் அனைவரையும் நாடாளுமன்றில் ஒன்றுதிரட்டுவதில் மும்முரமாக இருக்கின்றார்கள் என்று தெரிகிறது. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வயோதிபம் காரணமாக நாடாளுமன்ற அமர்வுகளில் பங்குபற்றுகின்றமையைத் தவிர்த்து வந்தாலும், நாளைய அமர்வு வாக்கெடுப்புகளோடு சம்பந்தப்பட்ட முக்கிய விடயம் என்பதால் நாளை நாடாளுமன்றத்துக்கு வருவதற்கு – அவர் முடிவெடுத்திருக்கிறார் எனத் தெரிகிறது.

பிரதி சபாநாயகர் தெரிவு தேர்தலில் முடியுமா அல்லது சமரசமாக ஒரு தரப்பு பிரேரிருக்கும் வேட்பாளரை மற்றைய தரப்பும் அங்கீகரித்து, சுமுகமாக முடியுமா என்பதை நாளை காலைதான் பார்க்க முடியும்.

ஆளும் தரப்பில் இருந்த சுதர்ஷினி பெர்ணாண்டோப் பிள்ளையை மனதில் வைத்துக்கொண்டு அவரைப் பிரதி சபாநாயகராகப் பிரேரிக்கும் நோக்கத்தோடு, ஒரு பெண் வேட்பாளரை இப்பதவிக்கு ஏகமனதாகத் தேர்ந்தால் என்ன என்று ஒரு கோரிக்கையை பிரதமர் முன்வைக்க, அவருக்கு பதிலடி தருவது போல, ஒரு பெண்ணை பிரதான எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பிரேரித்து இருக்கின்றது

முடிவு என்ன என்பது நாளை மதியம் தெரிந்து விடும்.

– மின்னல் –

## முன்னாள் மொட்டுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுயாதீன கட்சிகளின் 10 உறுப்பினர்களுக்கிடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து ரணில் அரசை ஆதரிக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கும் 10 சுயாதீன கட்சிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதே சமயம் புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஆதரவளிக்க உள்ளது.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் புதிய அரசாங்கத்திற்கு சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவை வழங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எழுதிய கடிதத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

புதிய அரசாங்கம் எடுக்கும் எந்தவொரு சரியான தீர்மானத்திற்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளிக்கும் என சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமையவுள்ள புதிய அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சி இன்று கூடவுள்ளது.

## ஆயிரத்துக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் தெரிவித்தன.

வடக்கு ஊவா, தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள் மற்றும் பொலிஸ் கல்லூரியில் இருந்தே அதிகாரிகள் கொழும்புக்கு, இன்று வரவழைக்கப்படவுள்ளனர்.

இவர்கள் அனைவரும்இன்று பிற்பகல் கொழும்பு தெற்கு பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபரின் கீழுள்ள மிரிஹான பொலிஸ் விளையாட்டு மைதானத்துக்கு சமுகமளிக்க உள்ளனர் எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தேசிய மற்றும் பொலிஸ் அடையாள அட்டைகள், குறிப்பேடுகள், மழையங்கிகள், பாதுகாப்பு தலைக்கவசங்கள் மற்றும் உத்தியோகபூர்வ குண்டாந்தடிகளை கொண்டு வர வேண்டும் என்றும் அவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நாளை நாடாளுமன்றம் கூடவிருக்கையிகேயே இந்தப் பொலிஸ் குவிப்பு இடம்பெறுகின்றது

இதேவேளை, நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டும் வகையில் அனைத்து பொலிஸ் பிரிவுகளிலும் ரோந்து பணியை அதிகப்படுத்துமாறு, அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ்மா அதிபரால் விசேட சுற்றறிக்கை அனுப்பபட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சமூக வலைதளங்கள் மூலம் வன்முறைச் செயல்களிலும், பல்வேறு குற்றச் செயல்களிலும் ஈடுபட மக்கள் தூண்டப்பட்டு வருகின்றனர் எனஒ புலனாய்வுத் துறை தெரிவித்துள்ளதாகவும் மக்கள் தேவையில்லாமல் ஒன்று கூடுவதைத் தவிர்க்க வேண்டும் எனவும் சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வன்முறை மற்றும் குற்றங்களைத் தடுக்க அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் தேவையான போது அவற்றைத் தடுக்க துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பான அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மக்கள் முன்னணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று இறுதியாக முள்ளிவாய்க்காலை சென்றடையவுள்ளது.

தமிழினப் படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் விசாரணை வேண்டும், தேசம், இறைமை, சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி வேண்டும் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகள் கட்டப்பட்டு இனப்படுகொலை நினைவுத்தூபி வைக்கப்பட்டுள்ள நிலையில், வீதிகளில் பயணித்த பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சாவகச்சேரி, கொடிகாமம் பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை போன்ற பல்வேறு பகுதிகளுக்கும் இந்த ஊர்திப் பவனி பயணித்தது.

இந்த ஊர்திப்பவனியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செல்வராசா கஜேந்திரன் உட்பட கட்சியின் உறுப்பினர்கள் பலரும் பங்கேற்றனர்.

## பிரதமர் ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் அரசியல் நெருக்கடியின் உண்மையான நிலைமைகள் மற்றும் நெருக்கடிக்குத் தீர்வு கண்டு இலங்கையை மீண்டும் பொருளாதார ரீதியாகக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று உரையாற்றும்போது தெரிவிப்பார் என பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## 55 அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைது செய்யப்பட்டுள்ளவர்களின் விவரங்களை வழங்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பாக 170 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், ஊரடங்குச் சட்டத்தை மீறியமை, தாக்குதல், பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பாக 230 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில்68பேர்விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரலவின் மரணம் தொடர்பில் நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இது ரணிலால் இயலாது!

ரணில் விக்கிரமசிங்கவைப் புதிய பிரதமராக நியமித்திருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அந்நிய மனம் தொடர்பில் ஒரு விடயத்தைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை மட்டுமல்ல, அதையும் தாண்டி மிக ஆழமாக ஊடுருவியுள்ள ஓர் அரசியல் பிரச்சினையும் உள்ளது என்று தமிழ்க் கூட்டமைப்பின் எம்.பி. சுமந்திரன் கூறியிருக்கின்ற விடயத்தை ஒட்டிய விவகாரம்தான் இது.

ரணில் விக்கிமசிங்கவின் நியமனம் என்பது, பொருளாதாரப் பிரச்சினை என்ற நெருக்கடியைத் தீர்ப்பதற்கான ஓர் எத்தனமாக மட்டுமே இருக்க முடியும்.

அவரது அனுபவம், சர்வதேச ஊடாட்டங்கள், பொருளாதார நிர்வாகத் தகுதி என்பவை பொருளாதார மேம்பாட்டுக்கு உதவக் கூடும்.

ஆனால், வெறும் ஒற்றை ஆசனத்துடன் நாடாளுமன்றுக்கு வந்திருக்கும் அவரால் – பாரம்பரியமாக அவருக்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்த கட்சி மற்றும் கூட்டணியின் ஆதரவில் மட்டுமே அரசு அமைத்து நிற்கும் அவரால் – இந்த அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணுவதற்கான ஆரம்பப் புள்ளிகளை நோக்கியாவது முன்னேற முடியுமா என்பது கேள்விக் குறிதான்.

அதாவது நாடு வீழ்ந்துள்ள அதலபாதாள நிலையில் இருந்து அதனை மீட்பதில் அரைக் கிணறு தூரம் தாண்டும் வரை வழிகாட்டக் கூடியவரைத்தான் ஜனாதிபதி கோட்டாபய இப்போது கூட்டிவந்து பிரதமராக நியமித்திருக்கின்றார் என்பதே நிஜம்.

பொருளாதாரப் பிரச்சினைகள், நெருக்கடிகள் தணிந்தால் அரசியல் பிரச்சினைகளும் தணிந்து விடும், தீர்ந்து விடும் என்று ஜனாதிபதியும் ஏனையோரும் எண்ணினால் அது வீண் கனவுதான்.

நாட்டில் நிறைவேற்றிகார ஜனாதிபதி ஆட்சிமுறையின் தவறுகளாலும், பிற சட்டவாக்கங்களாலும் ஏற்பட்ட குழப்பங்களுக்கும், நீண்ட காலம் புரையோடிப் போயுள்ள தேசியப் பிரச்சினைக்கும் அரசியல் ரீதியான தீர்வு காணப்படாவிட்டால், ரணிலின் புதிய அரசினால் விரைந்து மேம்படுத்தக் கூடிய பொருளாதார மீட்சியும் குறுகிய காலத்தில் சிதறி விடும் என்பதுதான் உண்மை.

தரப்புகளை ஒன்றிணைத்து, அரசியல் மாற்றங்களுக்கான இணக்கப்பாட்டையும் காலவரையறையையும் முன்னிறுத்தி, காரியமாற்றக் கூடிய ஒரு தலைமைத்துவமே இன்றைய தேவையாகும்.

ஆக, வெறும் ஒற்றை ஆசனத்துடன் – முற்றும் முழுதாக ஜனாதிபதியின் கட்சியின் ஆதரவில் மட்டும் தங்கி – பிரதமர் பதவிக்கு வந்திருக்கும் ரணிலினால் இந்த நாட்டுக்குத் தேவையான அரசியல் மாற்றத்தையா, தீர்வையோ கொண்டு வருவது என்பது சாத்தியமேயற்றது. அதற்கான பற்றுறுதியும் தீர்க்க தரிசனமும் அவருக்கு இருந்தாலும், அதை நோக்கி நகர்வதற்கான அரசியல் பலம் அவரிடம் இல்லை. மாறாக, அத்திசையை நோக்கி நகர்வதைத் தடுக்கும் அரசியல் பலவீனமே – ஆட்சித் தலைவரின் கட்சியில் தங்கி நிற்றல் என்ற பின்னடைவே – அவரிடம் மிஞ்சிக் கிடக்கின்றது.

அரசியல் சக்திகளை ஒன்றிணைத்து, நாட்டுக்குத் தேவையான அவசர – அவசிய – அரசமைப்பு மாற்றங்களைக் குறித்த காலக்கெடுவுக்குள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு – கடப்பாடு – பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், பிரதமருக்குக் கடிதம் மூலம் சுட்டிக்காட்டியுள்ளது.

மண் குதிரையை நம்பி ஆற்றைக் கடக்கக் கோரும் வேண்டுகோள்தான் இது!

## மே 18 முன்னாள் போராளிகள் தாக்குதல் முயற்சி த ஹிந்து நாளிதழுக்கு சாணக்கியன் கண்டனம்!



த ஹிந்து நாளிதழில் வெளியிடப்பட்டுள்ள செய்தி தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இலங்கை கடும் பொருளாதார அரசியல் நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் தாக்குதலை மேற்கொள்வதற்காக ஒன்றிணைகின்றனர் என த ஹிந்து நாழிதல் செய்தி வெளியிட்டுள்ளது.

தீவிரமான வன்முறைப் போராட்டங்களுக்கு மத்தியில் இலங்கை இரண்டு முறை அவசரகால நிலைமையை அறிவித்துள்ளது.

இந்தநிலையில் சர்வதேச தொடர்புகளைக் கொண்ட புலம்பெயர் தமிழர்களின் ஒரு பிரிவினர், போராட்டக்காரர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்து வரும் மோதல்களில் தங்கள் இருப்பை உறுதிப்படுத்த முயல்கின்றனர் என தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன என குறித்த செய்தியில் குறிப்பி டப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவு தினமான மே 18ஆம் திகதியை சில குழுக்கள் தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாக அனுசரித்து தாக்குதல்களை நடத்த திட்டமிடுகின்றன எனவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே குறித்த செய்தி தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலை யில், அதனை தடுக்கும் வகையிலா இவ்வாறான செய்தி வெளியிடப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

## யாழ். இந்து பழைய மாணவர் சங்க புதிய நிர்வாக சபை தெரிவு நேற்று

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்துக்குப் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதன் முன்னாள் தலைவர் செ. கண்ணதாசன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது, நடப்பாண்டுக்குரிய தலைவராக தங்கராஜா தவரூபன் தெரிவு செய்யப்பட்டார். இவருடன் செயலாளராக கோ. ரஜீவ், பொருளாளராக கு. அமரேஷ் அடங்கலாக 29 பேர் புதிய நிர்வாக சபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



## வடக்கு, கிழக்கை மையப்படுத்தி இடைக்கால நிர்வாகம் நிறுவல்!

### அரசியல் துறைசார் நிபுணர்களை ஒருங்கிணைக்க மதத்தலைவர்கள் முடிவு

இலங்கையின் ஏனைய பாகங்களில் காணப்படும் மனித மற்றும் அபிவிருத்தி மட்டங்களுக்குச் சமமாக வடக்கு, கிழக்கினையும் மேம்படுத்தும் முகமாக, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம், மீள்கட்டமைப்பு மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக இடைக்கால நிர்வாகத்தை நிறுவுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் செயற்பாட்டில் வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும், துறைசார் நிபுணர்களையும், புலம்பெயர் அமைப்புக்களையும் உள்ளீர்ப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளதோடு ஒருங்கிணைப்பு பணிகளை வடக்கு, கிழக்கைச் சார்ந்த மதத் தலைவர்களிடத்தில் ஒப்படைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், குறித்த இடைக்கால நிர்வாகத்தின் அதிகாரத்தை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய ஓர் உச்சசபை ஸ்தாபிப்பதற்கு முனைப்புக்காட்டப்படுகின்றது.

அந்த சபை, சிறப்பு சட்டவாக்கல், நிறைவேற்றதிகார, அரசியல்ரீதியான, பொருளாதார ரீதியான நிதிசார்பான, 3 அல்லது அதற்கும் மேற்பட்ட வருட காலத்துக்குமான இடைக்கால நடவடிக்கை ஒன்றாக சர்வதேச நிதியுதவியைப் பெறுவதற்கான அதிகாரங்கள் உட்பட்ட ஏனைய தொடர்புபட்ட, அதிகாரங்களையும் கொண்டிருக்க வேண்டும் என்றும் முன்மொழியப்பட்டுள்ளது.

அத்துடன், உள்நாட்டுப் பிரச்சினையும் தொடர் வன்முறைச் சம்பவங்களும் மீளவும் இடம்பெறாது என்பதை உறுதிப்படுத்தவும் சமமானதும் நிலைபேறானதுமான சமாதானத்தை அடையவும் இந்தப் பிராந்தியத்தின் பூகோள – அரசியல் திடத்தன்மையை நிறுவுவதற்கும் அதனைத் தொடர்ந்தும் தக்கவைப்பதற்குமாக, ஐக்கிய அமெரிக்கா, இந்தியா மற்றும் நாடுகளின் கோப் குழுக்களைச் சேர்ந்த சர்வதேச சமூகத்தை எந்தவொரு பேச்சுகளிலும் நடுவர்களாகவும் அதன் பின்னால் இடம்பெறும் ஒப்பந்தங்களின் நடைமுறைப்படுத்தல்களுக்கு உத்தரவாதமளிப்பவர்களாகக் கொண்டு அவர்களின் அனுசரணையின் கீழ் சுயநிர்ணய உரிமை மற்றும் இலங்கையில் நீண்டகாலமாக நிலவிவரும் தமிழ்த் தேசியக் கேள்விக்கு சமஷ்டிக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட அரசியல் ரீதியான தீர்வைப் பெறுவதற்கான பொறிமுறைகளை உருவாக்க வேண்டும் என்றும் முன்மொழியப்பட்டுள்ளது.

இந்த விடயம் சம்பந்தமாக யு.எஸ்.டாக், பிரித்தானிய தமிழர் பேரவை, கனேடிய தேசிய மக்களவை ஆகிய புலம்பெயர் அமைப்புக்கள் கரிசனை கொண்டுள்ளன. அத்துடன் இந்த விடயம் சம்பந்தமாக இலங்கைத் தமிழரசுக்கட்சியின் அரசியல் குழு கூட்டத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினான சிவஞானம் சிறிதரனால் முன்மொழிவொன்று செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ரணிலின் இராஜதந்திர முயற்சி வெற்றியளிக்குமாயின் நாடு பொருளாதார மீட்சிபெற வெகுகாலம் எடுக்காது

## முன்னாள் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா கருத்து

(அஸ்லம் எஸ்.மௌலானா)

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு, சர்வதேசத்தின் நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் இராஜதந்திர முயற்சிகள் வெற்றியளிக்குமாயின் எமது நாடு பொருளாதார மீட்சி பெறுவதற்கு வெகு காலம் எடுக்காது என முன்னாள் உயர் கல்வி பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பொருளாதார நெருக்கடியால் மக்கள் பாரிய இன்னல்களை எதிர்கொள்கின்றனர். இந்தப் பின்னணியில் தான் மக்கள் போராட்டம் உருவானது, அஹிம்சை வழியில் போராடிய போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டனர், போராட்டக்காரர்களைத் தாக்கியதால் மக்கள் ஆத்திரத்தில் ஆளும்தரப்பு எம்.பிக்கள், அமைச்சர்களின் வீடுகள், சொத்துகளை தேடித் தேடி தீ வைத்தனர், பல உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டன.

இத்தகைய அபாய சூழலில் அரசாங்கம் ஒன்று இல்லாத நிலை ஏற்பட்டது. உடனடியாக ஆட்சியை அமைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு பல தடவைகள் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். இறுதி நேரம் வரை இருந்து விட்டு தனது கட்சிக்காரர்கள் ஒரு சிலரின் அழுத்தத்தின் பின்னணியில், அதுவும் ரணிலை நியமிக்க முடிவானதன் பின்னரே பல நிபந்தனைகளை முன்வைத்து, தான் பதவியேற்கப் போகிறேன் என சஜித் அறிவித்தார். இது மிகவும் கோழைத்தனமான முடிவாகும்.

நாட்டில் இவ்வளவு பிரச்சினை உருவாகியும் எதிர்க்கட்சிகளால் மக்கள் சார்பாக ஒன்றுபட்டு தீர்மானம் எடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. நாட்டு மக்கள் தொடர்பாக எந்தவித கவலையும் அவர்கள் கொள்ளவில்லை. தங்கள் தங்களின் அரசியல் எதிர்காலத்தையே குறிக்கோளாகக் கொண்டு நிபந்தனைகள் பல விதித்தனர். இத்தகைய பின்னணியில் யாரும் ஆட்சிப்பொறுப்பை ஏற்க முன்வராத சூழலில்தான் வேறு வழியின்றி ரணிலை அழைத்து பொறுப்பைக் கொடுத்துள்ளனர்.

இருந்த போதிலும் ரணிலின் நியமனம் காலத்துக்கு ஏற்றதாகும். நாட்டின் கல்வி மற்றும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக மிகச்சிறந்த முடிவை எடுக்கும் ஆற்றல் அனுபவம் வாய்ந்தவர், சர்வதேச இராஜதந்திர உறவும் மதிநுட்பமும் நிறைந்தவர் என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இல்லை. சர்வதேச ரீதியில் அங்கீகாரம் கொண்ட பல திட்டங்களை கடந்த காலங்களில் நாட்டுக்கு அவர் முன்வைத்திருந்தார். ஆனால் அவற்றுக்கு மக்களோ பிற அரசியல் தலைமைகளோ சரியான இடம் கொடுக்கவில்லை.

எவ்வாறாயினும் இன்றைய சூழலில் ரணிலால் மாத்திரமே பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை அவரின் எதிரிகள் கூட ஏற்றுக் கொண்டுள்ளனர். எவரும் அவர் தகுதியற்றவர், திறமையற்றவர் என்று கூறவில்லை. பிரதமராகப் பதவியேற்ற ரணிலுக்குபலம்வாய்ந்தநாடுகள்பலதமதுவாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளதுடன் பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்பதற்கு உதவுவதாகவும் உறுதியளித்திருக்கின்றன. இது நெருக்கடியில் சிக்குண்டு தவிக்கின்ற எமது மக்களின் விடிவுக்கு நல்ல சமிக்ஜையாகவே தெரிகிறது.

விரைவில் அமெரிக்கா, ஜப்பான், இந்தியா, சீனா, இங்கிலாந்து, கனடா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளையும் அரபு நாடுகளையும் உள்ளடக்கி இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் சர்வதேச பொருளாதார மாநாட்டை நடத்தி, அதன் மூலம் நிலையான உதவித் திட்டத்திற்கான சர்வதேச ஒத்துழைப்பு பேரவையை அமைப்பதற்கு பிரதமர் ரணில் திட்டமிட்டுள்ளார். அவரது இந்த இராஜதந்திர முயற்சி வெற்றியளிக்குமாயின் – இலங்கை பொருளாதார மீட்சி பெறுவதற்கு வெகுகாலம் எடுக்காது என்பது திண்ணம்.

இவ்வாறான விடயங்கள் – சிதைந்து போயுள்ள எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப உதவும் சிறந்த வழி முறைகளாக நாம் நோக்கலாம். மிகவும் இக்கட்டான கட்டத்தில் – நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு முன்வராமல் பயந்து ஒதுங்குகின்றவர்களை விட – சவாலை ஏற்றுக் கொண்டு துணிச்சலுடன் முன்வந்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சந்தர்ப்பம் ஒன்றை வழங்கிப் பார்க்கலாம் என்று மயோன் முஸ்தபா மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# நிபந்தனைகள் எவையுமின்றி சஜித் பிரதமராவது பிரச்சினைகளைத் தீர்க்குமா என்பது சந்தேகமே!

## மக்கள் காங்கிரஸ் செயலாளர் கருத்து

(நூருல் ஹுதா உமர்)

உலகில் ஆளும் அரசாங்கத்திற்கெதிராக நிறைய போராட்டங்கள் நடைபெற்று ஆட்சிமாற்றங்கள் இடம் பெற்றிருக்கின்றன. அவற்றில் பெரும்பாலனவை அரசியல் போராட்டங்கள் ஒன்றில் ஆட்சியாளர்கள் கொடுங்கோலானவர்களாக இருப்பார்கள் அல்லது மக்களின் ஆதரவு இல்லாமல் குறுக்கு வழியில் அதிகாரத்துக்கு வந்தவர்களாக இருப்பார்கள் சிலவேளை ஜனநாயக விழுமியங்களைப் பின்பற்றாதவர்களாக இருப்பார்கள். இவற்றிற்கெல்லாம் மாறுபட்டதுதான் இன்று இலங்கையில் நடைபெறும் போராட்டங்கள் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஸ்தாபக செயலாளர் நாயகம் சட்டத்தரணி வை. எல்.எஸ். ஹமீட் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இலங்கை தற்போதைய ஆட்சியாளர்கள் குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிக்கவில்லை. மக்களின் அபரிமித ஆதரவுடன் ஆட்சிக்கு வந்தவர்கள். பெரும்பான்மை சமூகத்தவர்களைப் பொறுத்தவரை கொடுங்கோலர்களுமல்லர். இலங்கைப் போராட்டமென்பது முழுக்க, முழுக்க வயிற்றுப் பசியை அடிப்படையாக கொண்ட போராட்டம். பெற்றோல் இல்லை; டீசல் இல்லை; லாம்பெண்ணெய் இல்லை; சமைக்க காஸ் இல்லை; விவசாயிக்கு உரமில்லை. இல்லை, இல்லை. நாட்டில் இருப்பதெல்லாம் 'இல்லை' மாத்திரமே; என்கின்ற நிலை. இந்நிலையில்தான்தாம்ஆசையோடுகொண்டுவந்த அரசாங்கத்தையே மக்கள் வெறுக்கிறார்கள். மாறாக, இது ஓர் அரசியல் போராட்டமல்ல. இந்தப் போராட்டத்திற்கு சஜித்மீதுள்ள விருப்பமோ, ரணில்மீதுள்ள விருப்பமோ அல்லது அநுரமீதுள்ள விருப்பமோ காரணமல்ல.

வயிற்றுப்பசி நீங்கவேண்டும். 'இல்லை' எனும் நிலை இல்லாமலாக வேண்டும். எனவே, இந்தப் பின்னணியில் தான் ரணிலின் நியமனம் பார்க்கப்பட வேண்டும். இன்று ராஜபக்ஷக்களின் பிரதான அரசியல் எதிரி சஜித். சஜித்தைப் பிரதமராக்குவதில் துளியளவும் அவர்களுக்கு விருப்பம் இருக்க முடியாது. ஆனாலும் மக்களின் கோபத்தைத் தணிக்க, மக்களின் கணிசமான ஆதரவைப்பெற்ற பிரதான எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் உள்ளூர விருப்பமில்லாதபோதும் சஜித் அழைக்கப்பட்டார். ஆனால் சஜித்தின் பிரதான நிபந்தனையான ஜனாதிபதிப் பதவியையே பலி கொடுக்கும் நிலையை நிச்சயம் அவர்களால் ஏற்றுக்கொள்ளமுடியாது என்பது எதிர்பார்க்கக்கூடியதே!

மறுபுறம் இன்று மக்களின் முழுமையான எதிர்ப்பைச் சந்தித்துள்ள, பதவியில் இருந்து வெளியேறியே ஆகவேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றவர் ஜனாதிபதியா இருக்க, நிபந்தனையின்றி அவரின்கீழ் பிரதமர் பதவியை சஜித் ஏற்றுக்கொள்வதை மக்களும் பெரும்பாலானவர்கள் விரும்பமாட்டார்கள். அது சஜித்துக்கு அரசியல் தற்கொலையாக முடிவதோடு ராஜபக்ஷாக்களை மீண்டும் பலப்படுத்தவே உதவும். அதையும் தாண்டி, அவர் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டாலும் 20 இனால் மேலும் அதிகரிக்கப்பட்ட அதிகாரத்தைக்கொண்ட ஜனாதிபதி அவரை சுதந்திரமாக இயங்கவிடுவாரா? என்ற கேள்வி இருக்கின்றது. அதேநேரம், சஜித் ரணிலைப்போன்று பொருளாதாரத்துறையில் விற்பன்னம் நிறைந்தவரா? சர்வதேசத் தொடர்புகள் உள்ளவரா? என்ற கேள்விகள் உள்ள நிலையில் நாடாளுமன்றத்தில் தன்னிடம் சொந்தப் பெரும்பான்மையில்லாமல் ஒன்றில் அந்தப் பதினொரு கட்சிகளின் தயவில் அல்லது பொதுஜன பெரமுனவில் தயவில் அல்லது இரு தரப்பினதும் தயவில் ஆட்சி செய்யவேண்டிய நிலையில் சுதந்திரமாக இயங்கமுடியுமா? என்ற கேள்வியும் இருக்கின்றது.

இந்நிலையில், இன்று நாட்டுப் பொருளாதாரம் இருக்கின்ற அதலபாதாளநிலையில்இருந்து அவரால்மீட்சியைக்கொண்டு வரமுடியுமா? அவ்வாறு முடியாமல்போனால் அது சஜித்தையும் அவரது கட்சியையும் பாரதூரமாக பாதிப்பது மட்டுமல்ல, நாட்டுக்குப் பலமான மாற்று அணி இல்லாத இக்கட்டான நிலை தோன்றும். இவ்வாறான சூழ்நிலையில் புதிய அணியொன்று அல்லது பல புதிய அணிகள் கிழம்பி வரலாம். அவை வெற்றிபெறுமா? அவை எவ்வளவு தூரம் நாட்டை முன்னோக்கிக் கொண்டசெல்லும்? என்ற கேள்விகளும் எழுப்பப்படாமல் இருக்க முடியாது.

இந்நாட்டுக்கு ஜே.வி. பி. ஒரு மாற்றுத் தீர்வாக இருக்கமுடியாது என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். அது தொடர்பாக தேவையானால் இன்னுமொரு சந்தர்ப்பத்தில் விரிவாகப் பார்க்கலாம். மறுபுறம், இந்த சவால்கள் அனைத்தையும் தாண்டி, பிரதமர் பதவியை சஜித் பாரமெடுத்து நாட்டை ஒரளவு முன்னேற்றப்பாதையில் கொண்டுசெல்கிறார் எனத் தெரிந்தால் பொருத்தமான இடத்தில் ஏதாவது ஒரு பிரச்சினை உருவாக்கி சஜித்தின் பதவிக்கு ஜனாதிபதி ஆப்பு வைக்கலாம். பெரும்பான்மை இல்லாத சஜித்திற்கு ஆப்பு வைக்க, அவருக்கு ஆதரவளிக்கும் பெரமுனவோ அல்லது 11 கட்சியினரோ துணைபோகத்தயங்க மாட்டார்கள். அவர்கள் எல்லோரினதும் முகம் ஒன்றுதான். எனவே, இன்றைய நிலையில் சஜித் நிபந்தனைகள் எதுவுமின்றி பிரதமர் பதவியைப் பாரமெடுப்பது நாட்டுக்கு முன்னேற்றத்தை இன்றைய பிரச்சினைகளைத் தீர்க்குமா? என்பது சந்தேகமானதே. இந்நிலையில் சஜித்தின் பிரதமர் பதவி தொடர்பான தீர்மானம் மிகச்சரியானதே என்று தெரிவித்துள்ளார்.

# மீண்டும் விடுதலைப் புலிகள் செய்திகள் உண்மையில்லை

## பாதுகாப்பு அமைச்சு தகவல்

விடுதலைப் புலிகள் இலங்கையில் மீண்டும் தாக்குதல் நடத்தப் போகிறார்கள் என வெளியான செய்திகளை இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது.

திஹிந்து வெளியிட்ட செய்தி அடிப்படை ஆதாரமற்றது என்றும் அத்தகைய அச்சுறுத்தல் குறித்து தங்களுக்கு உளவுத்துறை எச்சரிக்கை எதுவும் கிடைக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

இந்திய உளவுத்துறை அறிக்கைகளை மேற்கோள்காட்டி வெளியான இந்த செய்திகள் இலங்கை ஊடகங்களால் பரவலாக பகிரப்பட்டது.

இனங்களுக்கிடையில் ஒற்றுமை ஏற்பட்டுவரும் நிலையில் திஹிந்து வெளியிட்ட செய்தி, மிகவும் கவலையளிக்கிறது என மனோ கணேசன் கடுமையாக விமர்சித்துள்ளார்.

# பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்படும்

டீசல் இன்மையால் நாடு முழுவதும் பஸ் சேவைகளை 10 சதவீதமாக குறைக்க நேரிட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து இந்த நிலை நீடித்தால் இன்று முதல் தனியார் பஸ்கள் சேவையில் இருந்து விலக நேரிடும் எனவும் அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களுக்கு சில நாள்களுக்கு மாத்திரமே டீசல் கையிருப்பில் உள்ளதாக அதன் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

# முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் நினைவேந்தல் கருத்தரங்கம் தமிழகத்தில்!




தமிழகத்தில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் கருத்தரங்கம் ஒன்று தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டு சனிக்கிழமை இடம் பெற்றது. 2009 ஆம் ஆண்டு இடம் பெற்ற இறுதி யுத்தத்தில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு தமிழர்களுக்கான நீதி மறுக்கப்பட்டு வருகின்ற நிலையில் இன்று 13 ஆண்டுகளை கடந்துள்ள நிலையிலும், எதிர்வரும் மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க் காலில் இனப்படுகொலை நினைவேந்தல் முன்னெடுக்கப்பட இருக்கின்றது. அந்தவகையில், தமிழகத்தில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் கருத்தரங்கம் ஒன்று தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக் கருத்தரங்கில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பங்கேற்றுள்ளார். இந்த கருத்தரங்கில் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, பழநெடுமாறன், கே.எஸ். ராதாகிருஷ்ணன் தி.மு.க. தலைவர்கள் போன்றோர் பங்கேற்பார்கள் என அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருந்தது. நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. அத்தோடு கருத் தரங்கில் பங்கேற்றவர்கள் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தினார்கள்.

## இலங்கை மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பாக பிரித்தானிய நாடாளுமன்றில் அவசர விவாதம் தேவை!

### அந்நாட்டு எம்.பி. சியோபைன் மெக்டொனாக் தெரிவிப்பு



இலங்கையில் மோசமடைந்துவரும் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் ஆராய்வதற்கு பிரித்தானிய நாடாளுமன்றத்தில் அவசர விவாதமொன்று அவசியமென வலியுறுத்தியுள்ள அந்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் சியோபைன் மெக்டொனாக், இந்த விடயத்தில் சர்வதேச நாணய நிதியம் தலையிடவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

தற்போது நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், ஜனாதிபதி பதவி விலகவேண்டுமென வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் பொதுமக்கள் போராட்டங்களை முன்னெடுத்துவருகின்றனர்.

இதுஇவ்வாறிருக்க கடந்த திங்கட்கிழமை அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபட்டுவந்தவர்கள்மீது அரசாங்க ஆதரவாளர்கள் வன்முறைத்தாக்குதல்களை நடத்தியதை அடுத்து, நாடு முழுவதும் வன்முறைகள் பதிவானதும் அமைதியின்மை நிலையொன்றும் தோற்றம்பெற்றது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே பிரித்தானிய நாடாளுமன்றத்தின் தொழிற்கட்சி உறுப்பினர் சியோ பைன் மெக்டொனாக் அவரது நாடாளுமன்ற உரையில் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் மிகமோசமடைந்துவரும் பொருளாதார நெருக்கடி மற்றும் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் ஆராய்வதற்கு பிரித்தானிய நாடாளுமன்றத்தில் அவசர விவாதமொன்று அவசியம் என்று வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது கடந்த திங்கட்கிழமை(09) ராஜபக்ஷ நிர்வாகத்தின் ஆதரவாளர்களின் செயற்பாட்டால் 9 பேர் கொல்லப்பட்டதுடன் சுமார் 200 பேர் காயமடைந்திருக்கின்றார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் தற்போதைய சூழ்நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் தலையீடு அவசியம் என்று வலியுறுத்திய அவர், இலங்கையில் தமிழ்மக்களுக்கான நீதியை வழங்குவதை முன்னிறுத்தியதாக இத்தலையீடுகள் அமையவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.



## யாழ்.போதனா வைத்தியசாலையில் ‘ஏ’ வகை குருதிக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவில் ‘ஏ’ வகை குருதிக்குத் தற்போது தட்டுப்பாடு நிலவுவதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் காரணமாக கடந்த 8 ஆம் திகதிக்குப் பின்னரான இரத்ததான முகாம் நிகழ்வுகள் இடை நிறுத்தப்பட்டன. இதனால், நேரடியாக இரத்த வங்கிப் பிரிவிற்கு வருகை தந்து இரத்ததானம் வழங்குபவர்களின் எண்ணிக்கையில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமையால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவில் ஏனைய குருதி வகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, குருதிக் கொடையாளர்களை இரத்ததானம் வழங்க முன்வருமாறும், குருதிக் கொடையாளர்கள் 0772105375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் இரத்தவங்கிப் பிரிவினர் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## கொழும்பு – புறக்கோட்டை பகுதியில் சரிந்து வீழ்ந்தது வெசாக் தோரணம்



கொழும்பு – புறக்கோட்டை பகுதியில் அமைக்கப்பட்ட வெசாக் தோரணம் ஒன்று சரிந்து வீழ்ந்துள்ளது.

சீரற்ற காலநிலையை அடுத்து வீசிய கடும் காற்றினாலேயே குறித்த தோரணம் சரிந்து வீழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா தொற்றையடுத்து கடந்த 2 ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது கொழும்பின் பல பகுதிகளில் வெசாக் தோரணம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், கொழும்பு – புறக்கோட்டைப் பகுதியில் அமைக்கப்பட்ட வெசாக் தோரணம் பலத்த மழை மற்றும் காற்றையடுத்து சரிந்து வீழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்பந்தனின் மர்மச் செயல் 18 ஆண்டுகளின்பின் துலங்கியது!

## ஆனந்தசங்கரி சாட்டை







கடந்த வாரம் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற உரை நிகழ்த்தும் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் குறுக்கீடு செய்தார். கோபமடைந்த ரணில், சம்பந்தப்பட்ட உறுப்பினர் ராஜபக்ஷவுடைய கட்சியின் அமைப்பாளராக 2013 ஆம் ஆண்டு இருந்ததையும் குறிப்பிட்டு, பல கோடி ரூபா ராஜபக்ஷவிடம் இருந்து விடுதலைப் புலிகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வாங்கிக் கொடுத்து தன்னை தோற்கடித்தனர் எனவும் குறிப்பிட்டு சம்பந்தனின் போலிமுகத்திரையைக் கிழித்துள்ளார்.

– இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்

தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டு 50 ஆண்டு நிறைவு தொடர்பாக வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

கடந்த வாரம் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற உரை நிகழ்த்தும் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் குறுக்கீடு செய்தார். கோபமடைந்த ரணில், சம்பந்தப்பட்ட உறுப்பினர் ராஜபக்ஷவுடைய கட்சியின் அமைப்பாளராக 2013 ஆம் ஆண்டு இருந்ததையும் குறிப்பிட்டு, பல கோடி ரூபா ராஜபக்ஷவிடம் இருந்து விடுதலைப் புலிகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வாங்கிக் கொடுத்து தன்னை தோற்கடித்தனர் எனவும் குறிப்பிட்டார். அவ்வாறு குறிப்பிட்ட வேளை அதே சம்பவத்தோடு ஒட்டியதுதான் 2004 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தலில் படு தோல்வியடைந்ததையும் குறிப்பிடத் தவறிவிட்டார். மறைக்கப்பட்ட பெரும் உண்மையை வெளிக்கொண்டுவராதது கவலைக்குரிய விடயமாகும். ஏனெனில் கலைக்கப்பட்ட சபைக்கு ரணில் வெற்றி பெற்றது போல், 2001ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் முப்பத்தாறாயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகளை பெற்ற நான், தெரிவாகிய ஒன்பது பேரில் முதலாவதாகத் தெரிவானேன்.

ரணிலை தோற்கடிக்க கையாண்ட அதே தந்திரத்தைத் தான் உபயோகித்து தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவராகிய என்னைத் தோற்கடித்தனர். இந்த சம்பவத்தில் வேடிக்கை என்னவென்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மோசடி மூலம் சட்டத்துக்கு விரோதமாக 22 பேர் வெற்றி பெற்றனர். இந்த சம்பவம் மிக முக்கியமாக தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தமிழ் இனத்துக்கும் செய்யப்பட்ட பெரும் துரோகமாகும். மட்டக்களப்பு மறுமலர்ச்சி மன்றத்தினர் விடுதலைப் புலிகளின் அனுசரணையோடு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டபடி இந்தத் தேர்தல் நடந்திருந்தால் 22 பேர் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் சட்டவிதிகளுக்கு அமைய வெற்றி பெற்றிருப்பர். இந்த முயற்சிக்கு விடுதலைப் புலிகளின் முழு ஒத்துழைப்பும் கிடைக்க விருந்தது. அகில இலங்கை காங்கிரஸ் கட்சி உட்பட ஒரு கொடியின் கீழ் ஒரே சின்னமாகிய உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடத் தயாராக இருந்தமை சகல நாட்டிலும் வாழும் தமிழ் மக்கள் மிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால் யாரோ செய்த சதியால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அழிவிற்கு இம் முயற்சி வழிகோலியது. அன்றைக்கு யுத்தம் முடிந்து மக்கள் சகயவாழ்விற்கு திரும்பியிருக்க வேண்டிய நிலையில் மர்மமான முறையில் ஏற்கனவே செய்யப்பட்டிருந்த சகல ஒழுங்குகளும் தூர வீசப்பட்டு, தமிழர் விடுதலைக் கூட்டணியை புறந்தள்ளிவிட்டு வேறு மூன்று முன்னாள் ஆயுதக் குழுக்கள் ஒன்றிணைக்கப்பட்டு, திருட்டுத்தனமாக திரு. சு.ப.தமிழ்ச்செல்வனால் அங்கீகரிக்கப்பட்ட தமிழரசுக் கட்சியின் சின்னமாகிய வீட்டுச்சின்னத்தில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தை புறந்தள்ளிவிட்டு, போட்டியிடுவதாகத் தீர்மானித்தனர். விடுதலைப் புலிகளின் சார்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அன்றைய செயலாளர் நாயகமாகிய இரா.சம்பந்தன் நியமனப் பத்திரத்தை தாக்கல் செய்தார். இந்தச் செயல் தமிழர் விடுதலைக் கூட்டணியை சிதைக்கிறதாக எண்ணி செயற்பட்டிருந்தாலும் அது நம் நாட்டுக்கும் நம் தமிழ் மக்களுக்கும் செய்த பெரும் துரோகமாகும். இதில் வேடிக்கை யாதெனில் 18 ஆண்டுகளாக வெளிவராத மர்மச் செயல் ரணில் விக்கிரமசிங்கவின் செயலால் ஒரு தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருக்கு நாடாளுமன்றத்தில் வைத்து பதிலடி கொடுத்ததன் மூலம் தெரியவந்தது.

இந்தச் சம்பவம் ஓர் இனத்தின் அழிவிற்கே வழிகோலும் என்று அன்றைய தமிழத் தேசியக் கூட்டமைப்பினர் கனவிலும் எண்ணியிருக்க மாட்டார்கள். ஒரு போராளி குழுவையே முற்றுமுழுதாக அழிக்கும் என்றும் இவர்கள் எண்ணியிருக்கமாட்டார்கள். ஜனநாயகத்தை பெருமளவில் போற்றி பேணிவந்த ஓர் இனத்தின் ஜனநாயகக் கோட்பாடுகளை தடம்புரள வைக்கும் என்று தெரிந்திருந்தும், பதவிக்கு முக்கியம் கொடுத்தே செயல்பட்டு வருகின்றனர். வேண்டியளவு அவர்களும் அவர்களை சார்ந்தவர்களும் போதியளவு சுகபோகத்தையும் அனுபவித்தனர். ஆனால் இழக்கக் கூடாத எல்லாவற்றையும் உடல், பொருள், ஆவி உட்பட அத்தனையையும் தமிழ் மக்கள் இழக்க நேரும் என்று இவர்கள் எண்ணிப்பார்க்கவில்லை. தெரிந்தும் தெரியாதது போல் நடிக்கிறார்கள். இவர்கள் தமிழ் மக்களுக்கும் நாட்டுக்கும் செய்த துரோகம் விவரிக்கமுடியாது என்பது மட்டுமல்ல, எமது பிரச்சினைகளும் ஒரு சிறு அளவேனும் இன்று வரை தீர்க்க முடியவில்லை.

**இன்று நம் கடமை என்ன?**

இப்படியான ஓர் நிலைமை தமிழ் மக்களுக்கு ஏற்படும் என்பதை உணர்ந்தே நம் பெரும் தலைவர்கள் தமக்குள் உள்ள வேற்றுமைகளை மறந்து தம் அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அத்தனையையும் கடைப்பிடித்து போட்டி பொறாமை தவிர்த்து, நம் இனத்தை காக்கவென்றே எமக்குள் இனி பிரிவில்லை என்ற கோட்பாட்டிற்கமைய செயற்பட்டமையே இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியாக, உலக ரீதியாகப் பரந்து வாழும் எம் இன மக்களிடம் கையளித்து சென்றனர்.

எவர் என்னைப்பற்றி எதைச் சொன்னாலும் பொய்ப் பிரசாரங்கள் செய்தாலும் என்னைப் பொறுத்தவரையில், 1972 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி பெரும் தலைவர்களாகிய தந்தை சா.ஜே.வே.செல்வநாயகம், பெரியார்கள் ஜி.ஜி.பொன்னம்பலம், சௌமியமூர்த்தி தொண்டமான் இணைந்து தமிழினத்தை ஒற்றுமைப்படுத்தி இனி நமக்குள் எதுவித பிரிவினையும் ஏற்படக்கூடாது என்று திடசங்கற்பம் பூண்டு, எம் எல்லோரையும் அரவணைத்து ஒன்றுபடுத்திய இந்த உத்தமர்கள் இன்று நம் மத்தியில் இல்லாது போனாலும், அவர்கள் காட்டிய வழியிலே இன்று வரை வாழ்ந்து வருகின்றேன், என்பதை எமது தலைவர்கள் ஒன்று சேர்ந்த 50 ஆண்டுகளை நிறைவு செய்யும் தினமாகிய இன்று அவர்கள் விட்டுச்சென்ற பணியை, இட்ட கட்டளையை சிரம்மேல் ஏற்று என்னுயிர் உள்ள வரை அவர்கள் காட்டிய வழியிலே பிரயாணம் செய்வேன் என உறுதியளிக்கின்றேன்.

இந்த நன்நாளிலே திருவாளர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், திருமதி அமிர்தலிங்கம் போன்ற பல அர்ப்பணிப்புடன் செயற்பட்ட கட்சித் தலைவர்கள், தொண்டர்கள் ஆகியோருடன் ஏற்பட்ட பல்வேறு சம்பவங்களைநினைவுகூறுகிறேன். துன்பநிகழ்வுகளையும் கண்ணீர் மல்க நினைவு கூறுகின்றேன். அனைவரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திப்பதோடு அவர்கள் விட்ட பணியை தொடர, எனக்கு வழிகாட்டியாக அவர்களை பிரகடனப்படுத்தி பொய், களவு, ஏமாற்று, திருட்டு போன்ற எச் செயலிலும் இன்று வரை ஈடுபட்டவனும் அல்லன், ஈடுபடப்போறவனும் அல்லன் அனைவரின் ஆசீர்வாதத்தோடு என் கட்சிப் பணியை தொடர அவர்களின் ஆசியை வேண்டிநிற்கிறேன். – என்றுள்ளது.

# 20 இற்கு ஆதரவளித்த முஸ்லிம் எம்.பிக்கள் மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கோரவேண்டும்

## முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.ரி. ஹசன் அலி தெரிவிப்பு



அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்கிய முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முஸ்லிம் மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டுமென, ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.ரி. ஹசன் அலி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

19 ஆவது திருத்த சட்டம் இல்லாமல் செய்யப்பட்டு 20 ஆவது திருத்த சட்டம் கொண்டு வரப்பட்டதன் மூலம் ஜனாதிபதிக்கு பூரண அதிகாரம் மீண்டும் கிடைக்கப்பெற்றதே நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலைக்குக் காரணமாகும்.

சில தமிழ் அரசியல்வாதிகளும் 20 ஆவது திருத்த சட்டத்துக்கு ஆதரவு வழங்கிஇருந்தனர். ஆனால் அவர்களை பிழை சொல்ல முடியாது. ஏனென்றால் அவர்கள் அரசாங்கத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டை முன்வைத்து மக்கள் ஆணையை பெற்று நாடாளுமன்றம் சென்றவர்கள்.

20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை காற்றில் பறக்க விட்டிருக்கின்றார்கள்.


தமிழ், முஸ்லிம் மக்களை காலம் காலமாக எதிரிகளாகவே பார்த்து அரசியல் செய்து வருகின்ற ராஜபக்ஷ அரசுக்கு ஆதரவாக முஸ்லிம் அரசியல்வாதிகள் கை உயர்த்தி முட்டு கொடுத்ததைதான் சகித்து கொள்ள முடியாது.

புதிய பிரதமர் தலைமையிலான அமைச்சரவை மக்களின் எதிர்பார்ப்புகள் மெல்ல மெல்லமாகவேனும் நிறைவேற வேண்டும். ஒரே இரவுக்குள் எல்லா பிரச்சினைகளும் தீர்ந்து விட போவதில்லை.

அதே நேரம் மாமூல் அரசியலை முஸ்லிம் அரசியல்வாதிகள் கை விட வேண்டும். முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பேரம்பேசுபவர்களாக மாறக் கூடாதெனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நுட்பியல் அவத்தை


ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கின்ற சூழலில் எரிபொருள் விலையேற்றம் மற்றும் தட்டுப்பாடு உந்துருளிகளை தூசு தட்டச் செய்திருக்கிறது. எரிவாயு இல்லையென்றதால் விறகடுப்புக்கு செல்ல வேண்டியிருக்கிறது. மின்சாரமின்மை கிணற்றடிக்கு சென்று வாளியில் தண்ணீர் அள்ள வைத்திருக்கிறது. கிறைண்டர் நினைத்த நேரத்தில் கிடைக்கவில்லை என்பதால் உரலிலும் அம்மியிலும் சம்பல் இடித்தல் அரைத்தல் என்று பழைமையின் சிறப்பை நோக்கித்திரும்பிக்கொண்டிருக்கிறோம். வடைக்கும் தோசைக்கும் உழுந்தாட்ட ஆட்டுக்கல் குழவியை நாடுகிற நிலையும் உண்டு. ஆக சுற்றுலாவிகளின் பார்வைக்காக வைக்கப்பட்ட பழையனவெல்லாம் பாவனைக்கு வந்துகொண்டிருக்கின்றன. பழைய நினைவுகள் மீள மீள வந்து பலவற்றையும் நினைவூட்டுகின்றன.

இப்போ பழம்பெருமை பேசுவோரை அதிகம் காணமுடிகிறது. 'அந்தக்காலம் எப்படிச் சிறப்பாகவிருந்தது' என்று சொல்லுவதை இளசுகள் கேட்டாக வேண்டிய நிலை வந்துகொண்டிருக்கிறது. இந்த பழைய நினைவுகளை மீட்கின்றபோது கறுப்பு வெள்ளை படங்களில் தம்நினைவுகளைத் தோய்த்து எடுக்கின்ற பலரைக் காணமுடிகிறது. கறுப்பு வெள்ளைப்படங்கள் போல வருமா? இது எவ்வளவு கலைநயம் என்பாரும் உளர். இந்த நிலைமையில் நண்பியொருவர் கேட்டார். பழசுகளையெல்லாம் பாவிக்கிற நிலை வாரது போல எங்களிட்ட இருக்கிற பழைய படங்களின்ர நெகட்டிவை படமாக கழுவுற நிலையும் திரும்ப வருமோ? அதுகளை கவனமா வைச்சிருக்க வேணுமோ? என்று கேட்டார். அவர் அதைக் கேட்டதும் தான் 'ஓ அந்த நெகட்டிவ் எல்லாத்தையும் கவனமா வைச்சிருக்கலாம். அதை வைச்சு இப்பவுள்ள டிஜிற்றல் யுகத்தில் படங்கள் பிரதியெடுக்கலாம்' என்று சொன்னேன்.

இப்போ ஐம்பது வயது தாண்டுபவர்கள் பலருக்கு தமது தாய் தந்தையருடன் சேர்ந்து மகிழ்வுடன் எடுத்துக்கொண்ட படங்கள் நெகட்டிவாகத்தான் இருக்கு அவற்றை எப்படி பிரதிகளாக்க முடியும்? என்ற கவலை உண்டு. இனி அந்தக் கவலை வேண்டாம். அவற்றை தற்போது மிகவும் சுலபமாக உங்கள் கையடக்கத்திறன் பேசி (Smart phone) மூலமாக



மாற்றிக்கொள்ளும் வசதிகள் வந்துவிட்டன. இது பலருக்குப் பயனுள்ளதாக அமையும்.

மனித இயல்பில் தன்னைப் பிரதிபண்ணும் ஓவியங்களைப்பார்த்து ரசித்த மனிதன் பின்னர் தனது பிம்பத்தை படமாக பார்த்து மகிழ்கிறான். இன்று தொழில்நுட்பத்திறன் காரணமாக படம் எடுத்தல் என்பது நம்மில் பெரும்பாலானோரின் நாளாந்த செயலாகிவிட்டது. இருப்பது நிற்பது காண்பது மற்றும் இயற்கைக்காட்சிகள் வரை எதுவாக இருந்தாலும் ஒரு நொடியில் படம் எடுக்க முடிகிறது. படமெடுப்பதென்பது தற்போது சிந்தித்து செய்யப்படும் ஒரு செயலாக இருப்பதில்லை. அது நாளாந்த செயல்களிலொன்றாகிவிட்டது, இயல்பாக நடந்தேறுகிறது. இதற்கு தொழில்நுட்பத்தில் வளர்ச்சியே காரணம் எனலாம். படச்சுருள் (Film Roll) படம்மெடுத்து கழுவி படத்தை தயாரித்த காலம்மாறி டிஜிற்றல் யுகத்தின் மெமறி காட் (memory card ) யில் படமெடுத்து பிறின்ட் போட்டு நொடியில் படங்களை பெற்றுக்கொள்ளும் நிலைக்கு வந்து விட்டோம். படச்சுருள் பயன்படுத்தி படமெடுத்தால் படங்களின் பிரதிகளை எடுப்பதற்கு வசதியாக நெகட்டிவ்வை பாதுகாத்து வைத்திருப்பார்கள். இப்போது அதற்கு தேவைஏற்படவில்லை சேமிப்பகத்தில் சேமித்து வைக்கப்படும் படங்களை ஒருநொடியில் தெரிவு செய்து பிரதியெடுக்கமுடியும். ஆனால்,நெகட்டிவைப்பயன்படுத்தி படங்களை டிஜிற்றல் வடிவத்துக்கு கொண்டு வர முடியும். இதற்காக யாரொருவரும் ஸ்ரூடியோ செல்லத்தேவையில்லை.

பழையபடச்சுருள்களை(Negatives)படங்களாக மாற்ற இப்போது உங்கள் கைபேசியைப்பயன்படுத்தலாம்.

ஒரு படத்தைப் படமெடுப்பதில் இருந்து அதை அச்சிடும் வரையிலான பாதையானது பிலிம் கமராக்களுடன் தொடர்புடையது. அனலாக் கமராக்களில் பயன்படுத்தப்படும் பிலிம் நெகட்டிவ்



களை படங்களாக மாற்றுவதற்கு சில செயலாக்கம் தேவை. ஆனால் இப்போதுள்ள தொழில்நுட்பத்தில் இந்தப் படங்களை இலகுவாக டிஜிற்றல் மயமாக்கலாம்.

நெகட்டிவ் என்பது அனலாக் கமராவைப் பயன்படுத்தி படமெடுக்கும்போது பிலிம் ஸ்ட்ரிப்களில் அச்சிடப்படும் படங்கள். அதாவது அவை இறுதிப் படத்தின் சரியான நேர்மாறானவை – கறுப்பு பாகங்கள் வெள்ளை, வெள்ளை பாகங்கள் கறுப்பு என்பதாக இது இருக்கும்.

இந்த நெகட்டிவ் படத்தின் 'மாஸ்டர் கோப்பு' எனலாம். இந்த உருப்படிகள் இருக்கும் வரை இந்த படங்களின் அதிக நகல்களை அச்சிடலாம். ஆனால் ஒரு படத்தின் நெகட்டிவ்வை இழுந்தால், மேலும் படங்களின் பிரதிகளை அச்சிட முடியாது. இங்கு நெகட்டிவ்கள் சேதமடைய வாய்ப்புக்கள் உள்ளன என்பதைக்கவனத்தில் கொள்ள வேண்டும். நெகட்டிவைப் பாதுகாப்பது கடினம். இதனால் அவற்றை டிஜிற்றல் மயமாக்குவது சிறந்தது.

ஒருநெகட்டிவை டிஜிற்றல் மயமாக்குவது சிதைவை நிறுத்த உதவுகிறது. அதாவது நெகட்டிவை டிஜிற்றல் படங்களாக மாற்றுவதன் மூலம் படங்களை எத்தனை முறை வேண்டுமானாலும் மீண்டும் அச்சிடலாம்.

நெகட்டிவ் வடிவில் உள்ள படத்தை டிஜிற்றல் மயமாக்க பல வழிகள் உள்ளன. இவற்றில் சிலவற்றிற்கு சிறப்பு உபகரணங்கள் தேவைப்படுகின்றன, மேலும் சில கேஜெட்டுகள் மற்றும் சாதனங்களை தேவையாகும். ஆனால் இப்போது மிக இலகுவாக செயலிகள் கிடைக்கின்றன. அவற்றைபதிவிறக்கம் செய்வதன்மூலம் டிஜிற்றல் மயமாக்க முடியும்.

பெரும்பாலான நவீன ஸ்மார்ட்போன்களில்



நல்ல கமராக்கள் இருப்பதால், டிஜிற்றல் கமராக்களைப் போலவே ஸ்கேனிங் முறையைப் பயன்படுத்தலாம். இது, வீட்டில் உள்ள பழைய நெகட்டிவ்கள் மற்றும் பிலிம் ஸ்லைடுகளின் தொகுப்பை டிஜிற்றல் மயமாக்குவது மிகவும் செலவு குறைந்ததாகும், மேலும் அந்த அனலாக் நினைவுகளைப் பாதுகாப்பதற்கான வழி எனவும் கொள்ளலாம். திறன்பேசியில் பதிவிறக்கம் செய்யப்படும் செயலி மூலமாக இது சாத்தியமாகிறது. இதற்கான சில செயலிகள் வருமாறு, Filmbox by photomyne, மற்றும் பல வகையாக ஸ்கேனர்கள் உள்ளன. Filmory – Analog Film Scanner, Film Scanner Pro, Kodak Mobile Film Scanner இவை நெகட்டிவை டிஜிற்றலாக மாற்ற உதவுகின்றன.

பிலிம் நெகட்டிவ் ஸ்ட்ரிப்களை டிஜிற்றல் வடிவில் பிரதி எடுப்பது, எதிர்காலத்தில் அவற்றைப் பாதுகாக்க சிறந்த வழியாகும். பிலிம் நெகட்டிவ்கள் நாளடைவில் சேதமடையக்கூடும் என்றாலும், டிஜிற்றல் தரத்தில் குறையாது, மேலும் அவை சேதமடையும் என்று கவலைப்படாமல் விரும்பும் பல பிரிண்ட்களை எடுத்துக்கொள்ளலாம்.

# வரலாறுகள் திருத்தப்படும் தருணமிது உலகத் தமிழர்களே ஒன்றுபடுவோம்!

## 13ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவு கூரல்

எதிர்வரும் மே 18ஆம் திகதி மத்திய லண்டனில் ட்ரபால்கர் சதுக்கத்தில் மாலை 5:30 மணிக்கு தொடங்கும் 13 ஆம் வருட முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவு கூரல் நிகழ்வில் அனைவரும் ஒன்று திரண்டு இழந்த எம் மக்களுக்காக அஞ்சலி செலுத்துவதுடன் நீதிக்கான பயணத்தில் நம்பிக்கையுடன் செயல்படுவோமென உறுதி எடுப்போம்.

இவ்வாறு பிரித்தானியா தமிழர் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

வெற்றிகளை மட்டுமே பார்க்க விரும்பியவர்கள் விடுதலையின் பாதையில் வரும் பின்னடைவுகளை கண்டு துவண்டு விடுவர். பின் தங்கிடுவர். பாதைகள் மாறி திசை மாறி சென்றிடுவர். தற்காலிக வெளிச்சங்களை நோக்கி அகன்றிடுவர். ஆனால் தாம் வரித்துக் கொண்ட இலட்சியத்துக்காக எந்த இடர் நேரினும் போற்றுவார் போற்றினாலும் தூற்றுவோர் தூற்றினாலும் இலக்கு மட்டுமே நோக்கிடும் அர்ச்சுனனாக வாழ்வியல் இச்சைகளுக்கு அப்பால் அயராது செயல்படும் மாமனிதர்கள் தான் கடும் சூறாவளியில் தாக்குப் பிடித்து வெற்றியின் கரைக்கு அழைத்து செல்லும் மீகாமான்களாவர்.

18 மே 2009 இற்குப் பின் இருந்த நிலை சற்று எம் கண் முன் வரட்டும்.

அதிர்ச்சியும், அயர்ச்சியும், கோபமும், பயமும், அவலமும், அவமானமுமாக, மரணமும், சிறை வாழ்க்கையுமாக, சுற்றியிருந்த இடமெல்லாம் நெருப்பும் புகையுமாக, கருக்கப்பட்ட உடலங்களும் நொறுக்கப்பட்ட கட்டடங்களுமாக, தாயகத்தின் உள்ளேயும் வெளியேயும் துரத்தி துரத்தி வேட்டையாடப்பட்ட விலங்குகளாக இருந்த தமிழினம் தொலை தூரத்து வெளிச்சத்தைத் தேடியது.

அந்த நிலையிலும் கூட போர்க் குணமும் விடுதலை வேட்கையும் நேர்மையும் உறுதியும் புத்தாக்க சக்தியும் ஒரு சிலரிடமாவது தங்கியிருந்தது. ஒரு வழி தடுக்கப்பட்டால் புது வழி திறக்கும். அறிவும் ஆற்றலும் செயல் திறனும் உள்ளவர்கள் தளரா நம்பிக்கையுடன் ஒருங்கு திரண்டு எழுந்தது எம்மை ஒடுக்க நினைத்த எதிரிக்கு விழுந்த முதலடி.

உலகின் முன்னே தமிழினத்தை பயங்கரவாதிகளாக – பிரிவினைவாதிகளாக – உருவகப்படுத்திய சிங்கள தேசம் இன்று கொடூர குற்றங்கள் புரிந்ததாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மாறாக தமிழினம் பாதிக்கப்பட்டவர்களாக – ஒடுக்கப்பட்டவர்களாக – எது வரினும் அயராது எழுந்து நீதிக்காகப் போராடும் இனமாக மதிக்கப்படுகிறது.

எம் விடுதலை போராட்டம் குரூரமாக சிதைக்கப்பட்டு 13 வருடங்களின் பின்னர் உலக ஒழுங்கில் ஒரு முக்கிய அமைவிடத்தில் பாரம்பரிய தாயகத்தை கொண்டிருக்கும் ஈழத் தமிழராகிய நாம் புறம் தள்ளி விட முடியாத ஒரு சக்தியாக இன்று எழுந்து வருகின்றோம்.

மாறாக, சிங்கள தேசம் தன் நாளாந்த அத்தியாவசிய தேவைகளைக் கூட உலக நாடுகளிடம் யாசித்துப் பெற வேண்டி உள்ளது. இலங்கைத் தீவின் மக்கள் படும் அவலங்களை நாம் அனுதாபத்துடனேயே பார்க்கின்றோம். அடுத்தடுத்து வந்த அனைத்து ஆட்சியாளர்களும் தமிழ் மக்கள் மீது பெரும் போரை கட்டமைத்து சிங்கள தேசம் எம்மை அழிவின் விளிம்பிற்குத் தள்ளியது. இதனை விட மோசமான பொருண்மிய தடைகள் எம் மீது ஏவி விடப்பட்டாலும் அதனை நேர்மையான திறமையான தலைமையுடன் வெற்றிகரமாக முறியடித்தோம். அனைத்து அதிகாரங்களையும் இறைமையுள்ள நாடு எனும் அங்கீகாரத்தையும் கொண்ட சிங்கள தேசம் செல்வழி தெரியாது தவிக்கின்றது. மற்றுமொரு ஆட்சி மாற்றம் இலங்கைத் தீவின் பிரச்சினைகளைத் தீர்க்கப் போவதில்லை.

தூர இருந்தே எம் மண்ணை அளவற்று நேசித்த புலம்பெயர் மக்களாகிய நாம் எடுத்த முன் முயற்சிகளும் உலக ஒழுங்கில் ஏற்பட்டு வரும் மாற்றங்களும் நீதிக்கும் உரிமைக்குமான எம் கோரிக்கைகளை இன்று முன் நோக்கித் தள்ளியுள்ளது. சரியான நேரத்தில் சரியான வியூகங்களை வகுத்து நெறி முறையாக செயற்பட வேண்டிய நேரமிது. எதிரி நிலை குலைந்து சரிவை சந்திக்கும் இந்த நேரத்தில், கடந்த 70 ஆண்டுகளில் சிறிலங்கா அனுபவிக்காத பெரும் பின்னடைவுகளை எதிர்கொள்ளும் வேளையில், எம் கரங்களை உறுதியாகப் பிணைத்து சாதுரியமாக நீதிக்கான பயணத்தை இன்னும் வேகமாக முன் நகர்த்தும் வேளை இது.

இந்த நிகழ்வில் 'Continuing Cycles of Violence and Genocide in Sri Lankaஆவண திரைப்படம் உலகெங்கிலும் பார்க்கக் கூடியதாக வெளியிட்டு வைக்கப்படும்.

பூகோள ஒழுங்கு மாற்றங்களும் தமிழ் மக்கள் மீதான தாக்கங்களும் குறித்த கண்காட்சி ஒன்று இளையோர்களின் முன்னெடுப்பில் வருகை தருவோரின் பார்வைக்கு வைக்கப்படும்.

பிரித்தானிய மற்றும் உலக நாடுகளின் முக்கிய பிரமுகர்கள் உரையாற்ற உள்ளனர்.







முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்படும்.

சரியாக மாலை 6 மணி 18 நிமிடத்தில் (மே 18 18:18) அனைத்து மக்களும் இணைந்து ஒளி ஏற்றப்படும்.

ஒன்றுபடுவோம்! ஒடுக்கப்பட்ட எம் மக்களுக்காக உறுதி எடுப்போம்!

நீதிக்கான பயணத்தை விரைவுபடுத்துவோம்!

இடம்: Trafalgar Square, London WC2N 5DN,
திகதி:18 May 2022, Wednesday
நேரம்: 5:30 PM என்றுள்ளது.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நான்காவது நாள் நவாலியில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், மே 16

இனப்படுகொலை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பமாகி நடைபெற்றுவரும் நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்பாடு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வருகின்றது

இந்தநிலையில் நேற்று (ஞாயிற்கிழமை) நான்காவது நாளாக நவாலி சென் பீட்டர்ஸ் தேவாலயத்தில் பூசையைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் – நவாலி புனித பீட்டர்ஸ் தேவாலயத்தில் 1995 ஆடி மாதம் 9ம் திகதி அரச விமான தாக்குதலில் 147 பொதுமக்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# கொழும்பு ஆர்ப்பாட்டத்தில் வெசாக் தின நிகழ்வுகள்

கொழும்பு – காலி முகத்திடலில் அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டம் தொடர்ந்து 37 ஆவது நாளாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று வெசாக் தின நிகழ்வு அங்கு முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வை வண்ண வெசாக்கூடுகள் அமைத்தும், மரவள்ளி கிழங்கு மற்றும் பாற்சோறு பொது மக்களுக்கு பகிர்ந்தும் கோலாகலமாக ஆர்ப்பாட்டக்காரர்கள் கொண்டாடினர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நேற்று மாலை அதிகளவான கலை அம்சங்கள் மற்றும் அதிக தோரணைகள், டிஜிற்றல் தோரணைகள் காட்சிப்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் நிதியமைச்சர் பதவி நிராகரித்தார் அலி சப்றி!



மீண்டும் நிதியமைச்சராக கடமையாற்றுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த கோரிக்கையை முன்னாள் நிதி அமைச்சர் அலி சப்றி நிராகரித்துள்ளார்.

குடும்ப உறுப்பினர்களின் அழுத்தத்தால் இந்தத் தீர்மானத்தை எடுத்து ஜனாதிபதியின் கோரிக்கையை நிராகரித்தேன் என அலி சப்றி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்திலேயே ஜனாதிபதி இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

பஸில் ராஜபக்ஷ நிதியமைச்சர் பதவியை இராஜினாமா செய்த பின்னர், அலி சப்றி நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டு 24 மணி நேரத்துக்குள் இராஜினாமா செய்தார்.

எனினும், அந்த இராஜினாமாவை ஜனாதிபதி ஏற்க மறுத்ததால், கடந்த 9ஆம் திகதி பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியதைத் தொடர்ந்து அமைச்சரவை கலைக்கப்பட்டதுடன், அலி சப்றியின் நிதியமைச்சர் பதவியும் இரத்துச் செய்யப்பட்டது.

# பெற்றோரின் சிலையை காக்கமுடியாத கோட்டா எவ்வாறு நாட்டு மக்களை காப்பாற்றப்போகிறார்?

## ஒன்றுவிட்ட சகோதரர் உதயங்க வீரதுங்க கேள்வி

ராஜபக்ஷ சகோதரர்களின் தாய் உயிருடன் இருந்தால், மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கிய விதம் தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை மன்னித்திருக்க மாட்டார் என ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ சகோதரர்களின் தாயின் சகோதரியின் புதல்வாரான அவர், இணையத்தள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இதனைக் கூறியுள்ளார்.

எந்த பிரச்சினை ஏற்பட்டாலும் நான் நாட்டில் இருந்து தப்பிச் செல்ல மாட்டேன், இதற்கு முன்னர் சுமார் 7 ஆண்டுகள் வெளிநாட்டில் இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அந்தப் பாத்திரத்தை மீண்டும் நடிக்கத் தயாரில்லை. மக்கள் ஏகோபித்த ஆதரவை வைத்துக்கொண்டு, நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக வந்தவர்கள், ஏன் ஏற்கனவே நாடு இருந்த இடத்தில் இருந்து நாட்டை அதளபாதாளத்திற்குள் தள்ள ஆரம்பித்தார்கள் என்பது எனக்கு கேள்விக்குறியாக இருக்கின்றது.

இதனை எனது அண்ணன் கோட்டாபய மாத்திரம் செய்திருந்தால், நான் அவரிடம் கேட்டிருப்பேன். எனினும் அண்ணனின் தலைமையின் கீழ் அவரை சுற்றி இருக்கும் அடிவருடிகள் காரணமாக சில விடயங்கள் தேவையான வகையில் நடக்கவில்லை.

ஜனாதிபதியோ, அமைச்சர்களோ தீர்மானங்களை எடுக்கும் போது, அவர்களுக்கு ஆலோசனைகளை வழங்க ஆலோசகர்கள் இருக்கின்றனர். இன்னும் எதுவும் முடிந்து விடவில்லை. இந்த நாட்டை மீட்டெடுக்க முடியும். இதனை ஒவ்வொருவருக்கும் தேவையான வகையில் செய்ய முடியாது.

நாட்டில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இருக்கின்றனர். அவர்களின் ஆலோசனைகளுக்கு அமைய சரியான முடிவுகளை தீர்மானங்களையும் எடுக்க வேண்டும்.

நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை தொடர்பில் இரண்டு மாதங்கள் தொடர்பான புள்ளிவிவரங்களை வழங்கினர். முதல் இரண்டு மாதங்களில் சுற்றுலாப் பயணிகள் வந்து ஒரு நாளுக்கு செலவு செய்யும் பணத்தை விட நான்கு மடங்கு அதிகமான விவரங்களை புள்ளிவிவரங்களில் வழங்கினர்.

முதல் இரண்டு மாதங்களில் 58.7 கோடி ரூபா சம்பாதித்தோம் எனக் கூறுகின்றனர். அதில் ஐந்தில் ஒரு பங்கே நாட்டுக்கு வருமானமாகக் கிடைத்துள்ளது, அந்த இடத்தில் ஜனாதிபதியை ஏமாற்றியுள்ளனர். சுற்றுலாத்துறை சம்பந்தப்பட்டவன் என்ற காரணத்தால், இந்த உதாரணத்தைக் கூறினேன்.

ஓர் அதிகாரியை பதவி நீக்குமாறு ஜனாதிபதியிடம் கூறியபோது, தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் என்னை சிறையில் அடைக்கப் போகிறேன் எனக் கூறினார். மீண்டும் நான் சிறைக்கு செல்வது நடக்கலாம் அல்லது நடக்காமலும் இருக்கலாம். வெள்ளை வான் வரலாம் அவை எல்லாம் பிரச்சினைகள் அல்ல.

ஜனாதிபதி எனது அண்ணன் என்னைத் திட்டினார். எங்கள் குடும்பத்தில் திட்டி பேசிக்கொள்வது சாதாரணம் விடயம். நான் பாடசாலையில் முதலாம் ஆண்டு படிக்கும் காலத்தில் இருந்தே குடும்பத்தினருடன் வளர்ந்தவன். இதனால், எங்களைத் திட்டுவது சாதாரணமான விடயம்.

மஹிந்த அண்ணன் என்னை திட்டவில்லை என்றால், நான் ஏதோ ஒன்று குறைந்து விட்டது போல் உணர்வேன். அன்பு காரணமாகத் திட்டுவார். சாதாரணமாக அண்ணன் கோட்டாபய திட்டும் போது அது அன்பாக இருக்காது. ஓர் அச்சுறுத்தல் போல் இருக்கும்.

மற்றவர்களுக்கு எப்படி என்று தெரியாது என்னை திட்டும் போது அப்படித்தான் இருக்கும். வெள்ளை வான் எனக்கு அனுப்பப்படலாம், அனுப்பப்படாமலும் இருக்கலாம். தற்போது அது எனக்கு பிரச்சினையல்ல.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த விதத்தில் பதவியில் இருந்து நீக்கியது தவறு. அலரி மாளிகையில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூட்டம் நடக்கும் போது நான் அங்கு இருந்தேன். நான் பிரதமருடன் இருந்தேன், அங்கு பலர் இருந்தனர்.

ஆனால், அங்கு வன்முறையைத் தூண்டி விடும் வகையில் பேசினர் என்பதை ஏற்றுக்கொள்ள மாட்டேன். அலரி மாளிகையில் நடந்த கூட்டத்துக்கு வந்த மக்களை காலிமுகத் திடலுக்கு அனுப்பும் எந்த தயார் நிலைகளும் இருக்கவில்லை.

அங்கு போகுமாறும் கூறவில்லை. ஆனால், மக்கள் சென்றனர். அதுதான் தேடி அறிய வேண்டிய பிரச்சினை. எங்கிருந்து மக்களுக்கு இந்த உந்து சக்தி கிடைத்தது. பிரதமருக்கு ஆதரவானர்கள் தூண்டி விடும் எந்த செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லை என்பது எனக்கு உறுதியாகத் தெரியும்.

ஜோன்ஸ்டன், சனத் நிஷாந்த போன்றவர்கள் பற்றியே கூறுகின்றேன். காலிமுகத் திடலுக்கு செல்லுமாறு அவர்கள் மக்களைத் தூண்டவில்லை. நான் மஹிந்த ராஜபக்ஷவுடன் இறுதி வரை இருந்தேன் என்பது பற்றி எனக்கு எந்த அச்சமும் இல்லை.

இதற்கு முன்னர் நானும் எனது மனைவி மற்றும் பிள்ளைகள் சுமார் 5 ஆண்டுகளாக இப்படியான அச்சத்தில் இருந்தோம். இதனால், புதிதாக அச்சம் கொள்ளத் தேவையில்லை.

வீடுகளையும் சொத்துக்களையும் தீ மூட்ட ஏன் இடமளித்தனர் என நான் கேட்கின்றேன். மிரிஹான சம்பவத்தின் பின்னர் சில மாதங்கள் இப்படியான எதிர்ப்புகள் இருந்து வந்தன. நாட்டில் தற்போது யுத்தம் இல்லை, அமைதியான போராட்டங்களை நடத்துவதை நாங்கள் எதிர்க்கவில்லை.

ஏன் இந்தப் போராட்டங்கள் நின்று விடாமல் தொடர்ந்தும் நடந்து வருகின்றன என்ற கேள்வி, ஜனாதிபதிக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இருக்கின்றது. எனக்கு தெரியும் ஜனாதிபதி சம்பவங்களை தடுத்து நிறுத்துமாறு ஆலோசனை வழங்கினார்.

ஆனால், அந்த ஆலோசனைகள் நடைமுறைப் படுத்தப்படவில்லை. மஹிந்த ராஜபக்ஷ திருகோணமலைக்கு சென்ற பின்னர் நான் அவரைத் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்கி வந்தேன்.

அவருக்கு தகவல்களை வழங்கவேண்டியது கட்டாயம். யுத்தம் ஒன்று நடந்த நாட்டில் பாதுகாப்பு தொடர்பான அனுபமிக்க தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் இருக்கும் போது, பஸ் மீது தீ வைத்தவர்கள் மற்றும் பொல்லுகளை எடுத்து வந்தவர்களை தடுக்காமல் விட்டமைக்கான காரணம் இருக்கின்றது.

உதாரணமாக ஒருவரிடம் ஒரு வீட்டின் மீது தீ வைக்குமாறு கூறினால், அவர் அதனைச் செய்வார். என்னிடம் அப்படியான பொறுப்பை ஒப்படைத்தால், அதனை செய்ய வேண்டியது எனது கடமை. ஏன் தண்ணீர் ஊற்றவில்லை என்று என்னிடம் கேட்க கூடாது. தண்ணீரை ஊற்றுவது தீயை அணைக்க வேண்டியவர்களின் வேலை. தீ வைப்பது எனது வேலை.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவியில் இருந்து விலக முடியும், ஏன் இவை பேச்சுகள் மூலம் நடக்காது இப்படி நடந்தன. ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான தொடர்பு பாலத்துக்கு நடுவில் வேறு நபர்கள் வரும் போது அந்த பாலம் பலமாக இருக்காது.

இரண்டு அணிகள் இருக்கின்றன. வியத் கம அணி மற்றும் எமது பொதுஜன பெரமுனவின் அணி. பொதுஜன பெரமுனவின் அணி பஸில் ராஜபக்ஷவின் அணி என்று கூற முடியாது. அது தற்போது பெரிய கட்சி. பஸில் ராஜபக்ஷ அதன் தேசிய அமைப்பாளர் என்ற வகையில் கட்சியை வளர்த்தெடுத்தார்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் பிளவை ஏற்படுத்தியது வியத் கம மற்றும் பொதுஜன பெரமுன. பொதுஜன பெரமுனவினர் மஹிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடுகளைக் கொண்டவர்கள், இவர்களின் நிலைப்பாடுகள் வியத் கமவின் கொள்கைகளுடன் சில இடங்களில் ஒத்து போகாது.

இதன் காரணமாக சில கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. மஹிந்த ராஜபக்ஷ காரணமாகவே கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவிக்கு வந்தார். பொதுஜன பெரமுனவுக்கு கிடைத்த முழு வாக்குகளும் மஹிந்த ராஜபக்ஷவுக்காக கிடைத்த வாக்குகள். அந்த கட்சி மஹிந்த ராஜபக்ஷவுக்காக உருவாக்கப்பட்டது.

நாங்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் படத்தை பயன்படுத்தியே வென்றோம் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறினர். ஜனாதிபதியின் படத்தை பயன்படுத்தி அவர்கள் வெல்லவில்லை. அப்படியானால், மஹிந்த ராஜபக்ஷவே அரசியல் ரீதியான பலம்.

இதனால், வியத் கமவுக்குத் தேவையான வகையில் மஹிந்தவை நீக்கியதை நாங்கள் முற்றாக எதிர்க்கின்றோம். ராஜபக்ஷவினரின் தாய் உயிருடன் இருந்தால், மஹிந்த ராஜபக்ஷ பதவியில் இருந்து நீக்கப்பட்ட விதம் தொடர்பில் கோட்டாபய ராஜபக்ஷவை மன்னித்து இருக்க மாட்டார்.

அவர் மாத்திரமல்ல எனது தாய், ஜனாதிபதியின் சின்னம்மா, அவரை தூக்கி வளர்த்தவர். மஹிந்த ராஜபக்ஷவை பதவி நீக்கிய விதத்தை அவர்கள் இருவரும் ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார்கள்.

ஜனாதிபதியுடன் இருக்கும் அணியினரே மஹிந்த ராஜபக்ஷவை பதவியில் இருந்து நீக்கும் வகையில் செயற்பட்டனர். அந்த விடயத்தில் ஜனாதிபதி எடுத்த தீர்மானம் தொடர்பிலும் ஒரு சிக்கல் இருக்கின்றது.

இப்படியான தீர்மானங்களை எடுக்கும் போது ஜனாதிபதி அரசியல் சார்ந்த நபர்களிடம் ஆலோசனைகளை பெற்றிருக்க வேண்டும். பசளை தொடர்பாக ஜனாதிபதி எடுத்த முடிவு தவறானது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

ஜனாதிபதி விவசாயத்துடன் சம்பந்தப்பட்டவர் அல்லர். சமல் அண்ணன் அதில் சம்பந்தப்பட்டவர், அவர் அது சம்பந்தமான தீர்மானத்தை எடுத்திருந்தால், தவறாக மாறியிருக்காது.

கோட்டாபய ராஜபக்ஷ ஓர் இராணுவ அதிகாரியாக, போரை வென்றவர் என்ற வகையில் பாதுகாப்பு தொடர்பான விடயத்தில் திறமையானவர். ஏன் அவரால், பஸ்கள் எரியூட்டப்படுவதை நிறுத்த முடியாமல் போனது.

பிரச்சினைகளை தடுத்து நிறுத்தாது அதனை அதிகரிக்க செய்தனர் என்றே எமக்கு எண்ணத் தோன்றுகிறது. ஜனாதிபதி பதவி விலகுமாறு கோரியதால், பிரதமர் பதவி விலக நேரிட்டது.

ஏன் பிரதமர் பதவி விலக வேண்டும். பிரதமர் காரணமாகவே பொதுஜன பெரமுனவுக்கும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்குகள் கிடைத்தன. இலங்கையின் நிலைப்பாடு என்பது காலிமுகத் திடலில் இருப்பவர்களோ, முகநூலில் இருப்பவர்களோ அல்லர்.

சிலர் இவர்களே இலங்கையின் முழு ஜன சமூகம் என கருதுகின்றனர். மஹிந்த ராஜபக்ஷ மீதுள்ள நம்பிக்கை காரணமாக வாக்குகள் கிடைத்தன. ஜனாதிபதி நம்பிக்கை இருக்குமாயின் இரண்டு ஆண்டுகள் மக்கள் வெளியேறுமாறு கூறுவார்களா?.

மஹிந்த ராஜபக்ஷ வெறுப்படைந்துள்ளார். தாய், தந்தையின் கல்லறைகளை பாதுகாக்க முடியாதவர், மக்களை எவ்வாறு பாதுகாப்பார்?. மெதமுலன வீடும் அழியவில்லை, கால்டன் வீடும் அழியவில்லை. மெதமுலனவில் எனது இன்னுமொரு அண்ணனின் வீடே தீயிடப்பட்டது.

ஜனாதிபதி, பிரதமர் உட்பட முழுமையான அரசாங்கத்தின் அதிகாரம் கையில் இருக்கும் போது தமது தாய், தந்தையின் கல்லறைகளைப் பாதுகாக்க முடியாவிட்டால், தான் வழங்கிய உத்தரவுகளை அதிகாரிகள் நடைமுறைப்படுத்தவில்லை என்றால், ஜனாதிபதி இவை பற்றி கண்டறியாது, மற்றவர்கள் மீது குற்றம் சுமத்துவதில் பயனில்லை.

வியத் கம மற்றும் பொதுஜன பெரமுன ஆகிய தரப்பே ஒன்றாக ஒரு மேசையில் அமர்ந்து ஒற்றுமையாக சாப்பிட்ட சகோதரர்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்தினர்.

ராஜபக்ஷவினரின் அரசியல் இத்தோடு முடிந்து விடும் என்று கூற முடியாது. அமெரிக்கா சார்பான அணி ஒன்று உருவானமை மற்றும் அமெரிக்காவுடன் பெரிய தொடர்புகள் இல்லாத அணி உருவானமை ஆகியனவே இவற்றுக்குக் காரணம்.

இந்த அணிகளுக்கு இடையிலேயே இந்த மோதல் காணப்படுகிறது. நாட்டு மக்களுக்கு ராஜபக்ஷவினர் மீது வெறுப்பு ஏற்படக் காரணமாக இருந்தவர் கோட்டாபய ராஜபக்ஷ. காலிமுகத் திடலில் யாருடைய பெயரைக் கூறுகின்றனர்.

தமது தாய், தந்தையின் கல்லறைகளை பாதுகாக்க முடியாது போனமை தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷ பொறுப்புக் கூற வேண்டியதில்லை. வெள்ளை வான் எங்கெல்லாம் அனுப்பி வைக்கப்பட்டது என்பது எனக்குத் தெரியாது, ஆனால் சில விடயங்கள் பற்றி எனக்குத் தெரியும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒன்றாக இருக்க பொருத்தமானவர்கள். இவர்கள் இருவருக்கும் குரோதமும் விரோதமும் அதிகம்.

துறைமுகத்தில் கொள்கலன் பெட்டியில் இருக்கும் எனது பிள்ளைகளின் கல்வி ஆவணங்களை சில நேரம் ரணில் விக்கிரசிங்க விடுத்துக்கொள்ள உதவலாம், ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக கோட்டாபய ராஜபக்ஷ அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவில்லை. கோட்டாபய ராஜபக்ஷவைவிட ரணில் சிறந்தவர். கோட்டாபய ஆத்திரமடைய கூடியவர். அதிகமாகக் கோபப்படுபவர்.

மிக் விமான கொடுக்கல், வாங்கல் தொடர்பான கோப்புகள் மீண்டும் திறக்கப்படுவதை நான் விரும்புகிறேன். மிக் விமான கொடுக்கல், வாங்கல்கள் கோப்புகள் தொடர்பில் நாட்டின் நீதிமன்றங்களில் முக்கியமான உண்மைகள் பேசப்படுவதில்லை.

மிக் விமானங்களை கொள்வனவு செய்ய அனுமதி, வழங்கியது அதில் கையெழுத்திட்டது உதயங்க வீரதுங்க அல்ல. அனுமதி வழங்கியது கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அமைச்சரவை விலை மனு குழுவில் 23 பேர் இருக்கின்றனர் எனவும் உதயங்க வீரதுங்க கூறியுள்ளார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# புலம்பெயர் மக்களின் எதிரொலியும் தாக்கமும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் -12

பலர் ரணிலை ஒரு பேரினவாத மேலாதிக்க வாதியாகக் கணிப்பது இல்லை. ஆனாலும் பேரினவாதத்திற்கும் மேலாண்மைக்கும் ஆதரவாகவே செயற்பட்டவர் அவர். அதனை அவர் மீறியவர் அல்லர்.

நோர்வேயின் அனுசரணையுடன் நடந்த சமாதானப் பேச்சுக் காலங்களில் மேலத்தேய நாடுகள் கூட்டாக வழங்க விருந்த நிதி உதவி பற்றிய பூர்வாங்க கூட்டமொன்று அமெரிக்காவில் நடத்த



ஒஸ்லோவில் ரணில் — ஆர்மிடேஜ்

ஒழுங்குகள் செய்யப்பட்டன. அதற்கு விடுதலைப் புலிகளுக்கு அழைப்பும் விசாவும் அமெரிக்காவால் தரப்பட வில்லை. அதற்குக் கூறப்பட்ட முதன்மைக் காரணம் அவர்கள் அமெரிக்காவின் பயங்கரவாதிகள் பட்டியலில் உள்ளனர் என்பதே.

சமரசப் பேச்சு தொடங்கப்பட்ட நாள்களிலிருந்தே இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் சரி சம அந்தஸ்தில் பேச்சுக்களில் ஈடுபட்டு அதனை முன்னெடுப்பது என்றே இணக்கம் காணப்பட்டிருந்தது.

அது மட்டுமல்ல, உதவி வழங்கும் நாடுகளை இரு தரப்புகளும் – இலங்கை அரசும் புலிகளும் – ஒன்றாக அணுகுவது என்றே சமாதானப் பேச்சுகளின் ஆரம்பத்திலேயே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் ஜப்பான் (டோக்கியோ) மாநாட்டுக்கு முன்னரான முதலாவது முன்னாயத்தக் கூட்டம் நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற போது அதில் இலங்கைத் தரப்பில் புலிகளும் சேர்ந்து ஓரணியாக பங்குபற்றினர். இலங்கை அரசின் பிரதிநிதிகள் குழுவுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்கினார். சமாதானப் பேச்சுகளில் அரசுத் தரப்பில் தலைமை வகித்த அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸும், விடுதலைப் புலிகள் தரப்பில் தலைமை வகித்த மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும் மேற்படி உதவி வழங்கும் நாடுகளின் ஒஸ்லோ முன்னாயத்தக் கூட்டத்தில் இலங்கை அணியின் இணைப் பிரதித் தலைவர்களாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து ஒன்றாகப் பங்குபற்றினார்கள். விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் இலங்கைத் தரப்புப் பிரதிநிதிகள் குழுவின் இணைப் பிரதித் தலைவராகப் பங்குபற்றிய அந்தக் கூட்டத்தில் அமெரிக்க தரப்பில் அதன் அப்போதைய பிரதி ராஜாங்கச் செயலாளர்(பிரதி வெளி விவகார அமைச்சர்) ரிச்சர்ட் ஆர்மிடேஜ் ஜும் பங்குபற்றினார். (அந்தக் கூட்டத்தின் ஆரம்ப வைபவத்தில் ரணில், ஆர்மிடேஜ் எல்லோரும் பேசினர். அப்போது இலங்கை அரசுத் தரப்பு அணியில் ரணிலை அடுத்து பீரிஸ், மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எல்லோரும் அமர்ந்து இருந்தனர். ஆனால் இலங்கைக்கு உதவும்படி பீரிஸும், பாலசிங்கமும் உரையாற்றுவதற்கு முன்னர் இடையில் ஒரு தேநீர் இடைவேளை வழங்கப்பட்டது. அதனைப் பயன்படுத்தி அமெரிக்க பிரதி ராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் வேளியேறி விட்டார். அன்ரன் பாலசிங்கம் உரையாற்றும் போது அதை செவிமடுக்கவும், அப்படி இலங்கை நாட்டுப் பிரதிநிதியாக புலிகளின் பேசுக்குழுத் தலைவர் உரையாற்றுகின்றமையை அமெரிக்க பிரதி ராஜாங்கச் செயலாளர் பிரசன்னமாகி புலிகளை அங்கீகரிக்கின்றார் என்ற கருத்து ஏற்படாமலும் இருக்கும் விதத்தில் நிகழ்ச்சி நிரல் ஒழுங்கமைக்கப்படுவதை புலிகள் தரப்புக்குத் தெரியாமலேயே நோர்வே அனுசரணையாளர்களுடன் சேர்ந்து ரணிலே மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டு உண்டு. கூட்டம் நடைபெற்றுக் கொண்டு இருக்கும்போது – பாலசிங்கத்தின் பேச்சுக்கு முன்னர் – இடைநடுவில் அமெரிக்கப் பிரதிநிதிகள் குழு வெளியேறுவதற்கான ஏற்பாட்டை, இடையில் தேநீர் இடைவேளை ஒன்றைப் புகுத்தி ரணிலே கனகச்சிதமாகவும் சத்தமின்றியும் செய்து கொடுத்தார்.)


ஒஸ்லோவில் ரணில் — பாலசிங்கம்

அதன் பின்னர்தான் உதவும் நாடுகளின் கூட்டத்துக்கு முன்னரான இரண்டாவது முன்னாயத்த கூட்டம் அமெரிக்காவுக்கு நகர்த்தப்பட்டு, அதனடிப்படையில் புலிகள் அங்கு செல்ல முடியாது என்ற காரணத்தைக் காட்டி அவர்கள் ஒதுக்கப்பட்டார்கள். அந்த விடயத்திலும் ரணில் விக்கிரமசிங்க புலிகளை அரவணைத்து, நியாயத்தை நிலைநாட்டி நடக்கவில்லை. புலிகளைக் கழற்றி விடுவதற்கு அமெரிக்காவோடு சேர்ந்து தந்திரம் செய்து, கூட்டத்தை அமெரிக்காவில் வேண்டுமென்றே ஏற்பாடு செய்தார் என்று அப்போது கருதப்பட்டது.

ஆனால் அமெரிக்க முன்னாயத்தக் கூட்டத்தில் புலிகள் ஒதுக்கப்பட்டார்கள். இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்த இக்கட்டுகளைக் களைபவராக உலகுக்குக் காட்டிக் கொண்டு, விடுதலைப் புலிகளையும் அரவணைத்துப் போகாமல், சர்வதேசத்திடம் இருந்து வரக்கூடிய நிதியிலேயே ரணில் குறியாக இருந்தார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான மனசுத்தியான பேச்சு வார்த்தைகள் இல்லாமல், ரணில் இந்தப் பேச்சு முயற்சிகளில் படங்களைக் காட்டி நிதி பெறுவதை முக்கியத்துவப் படுத்துகிறார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. அவற்றைப் பற்றி அவர் கவலைப்படவில்லை.

இப்பொழுது பிரதமராகப் பதவி ஏற்றதும் அதே பாணியில் அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்வதும், பொருளாதாரத்தை சீர்படுத்துவதுதான் முக்கியம் என்கிறார். மேலைத்தேய நாடுகளின் கூட்டு முயற்சியில் அதைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்க அவரின் பழைய அனுபவங்களும், மேலைத்தேய நாடுகளில் உள்ள உறவுகளும், தொடர்புகளும் அவற்றைச் சாத்தியமாகலாம் என்ற நம்பிக்கையைப் பொதுவாக மக்களுக்கு ஏற்படுத்தப் பார்க்கிறார்.

இருக்கும் பொருளாதார நெருக்கடியில் மக்கள் – எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் கூட – அவரை விரும்பா விட்டாலும், இருக்கின்றவர்களில் இவற்றைச் செய்யக்கூடியவர் அவர்தான் என்று எதிர் பார்ப்பை வைக்கின்றனர்.

ஆகவே ரணில் நாட்டை சீர்படுத்துவதில் அதனைப் பெரும்பான்மை மேலாதிக்க போக்கிலிருந்து விலகி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண முக்கியத்துவம் கொடுப்பார் என்று எதிர் பார்ப்பதற்கில்லை. மஹிந்த, கோட்டா போன்றவர்களின் எதிரொலியாகத் தமிழ் மக்களுக்குத் தேவையானது பொருளாதார வளர்ச்சியே அன்றி அரசியல் தீர்வுகள் அல்ல, பொருளாதாரத்தில் நாட்டின் ஸ்திரத்தன்மைதான் முக்கியம், அதற்கு யாவரும் பங்களிக்க வேண்டும் என்ற பிரசாரங்கள்தான் அவராலும் நடத்தப்படும்.

ராஜபக்ஷக்ளிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்ட விரும்பினாலும் ரணிலை பற்றி நல்லாட்சி காலங்களின் ஊடாகத் தமிழ் மக்கள் அறிந்துள்ளார்கள். அவர்களது அணுகுமுறைகள் அந்த அனுபவங்களிலிருந்து வளர வேண்டும்.

நல்லாட்சி, மஹிந்தவை ஜனாதிபதி பதவியிலிருந்து விலக்குவதில் வெற்றி பெற்று, சர்வதேச சமூகம் சில எதிர்பார்ப்புகளை வைத்து, அவரது அரசை அமைக்க வழி செய்தது.

இன்றைய நிலையிலோ ரணில் பிரதமராக ராஜபக்ஷக்களின் ஆதரவு, அனுசரணை மட்டுமல்ல அவர்களோடு சவாரி செய்து ஏற்படுத்திக்கொண்ட டீலில் சர்வதேச சமூகத்தையும் அணுகி பொருளாதாரத்தை நிமிர்த்தப் புறப்படுகிறார் .

அதில் காலிமுகத்திடலில் மக்கள் வைத்த 'எல்லா மக்களையும் உள்வாங்கியதான நாட்டு நிர்வாகம்' என்பதைப் பற்றி எல்லாம் அவர் பேச்செடுக்கவில்லை.

நண்பர் சித்தார்த்தன் தனிப்பட்ட ரீதியில் பேசும்போது, தமிழ் கட்சிகள் தாங்கள் இருக்கும் நிலையில் அரசுக்கு ஏதும் உதவிகள் இலைமறைகாயாக செய்யலாமே ஒழிய ஒரு காலமும் அரசில் சேர்ந்து எதையும் செய்ய முற்படக் கூடாது, அப்படிச் செய்தால் மக்கள் அவர்களையும் டக்ளஸ், கருணா, வியாழேந்திரன், பிள்ளையான் போன்றோரிடம் இருந்து பிரித்துப் பார்க்க மாட்டார்கள் என்பார். அந்தச் சித்தாந்தங்களில் கூட்டமைப்பு இலங்கை அரசுகளுடன் சேர்ந்து இயங்கியது இல்லை. இன்றும் அப்படி சேர்வார்கள் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. ஆகவே இலைமறை காயானாலும் தமிழ் அரசியல்வாதிகளோ, கட்சிகளோ ஒரு திடமான அணுகுமுறையை இந்தச் சந்தர்ப்பங்களில் வகுக்க வேண்டும். இதில் நாட்டின் எதிர்பார்ப்புக்கள் என்ன என்பதையும் கணித்துக் கொள்ள வேண்டும்.

(வளரும்)

காலைக்கதிர் Kalaikkathir

## அமைச்சர் பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு விளக்கமளித்தார். அவர் இது தொடர்பில் கூறியவை வருமாறு:–

நாடாளுமன்றத்தில் இருக்கும் அதி கூடிய அனுபவம் மிகுந்த – அறிவு மிகுந்த – நாடாளுமன்ற உறுப்பினர்தான் ரணில் விக்கிரமசிங்க. ஆகவே தற்போது இருக்கும் நாட்டின் மிகச் சிக்கலான பொருளாதார நிலையிலிருந்து மீட்டு நாட்டை எப்படிக் கொண்டு செல்லலாம் என்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்குத் தகைமைகள் இருப்பவர் அவர்தான். அதற்கான காரணம் அவருக்கு பல நாடுகளின் ஆதரவு கிடைக்கும். முன்னர் அவ்வப்போது எதிர்கொண்ட பிரச்சினைகளில் இருந்து நாட்டை அவர் மீட்டமையால் அது சம்பந்தமான போதிய அறிவு அவருக்குள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அமைச்சரவையில் இடம் பெறுமாறு இதுவரையில் எவரும் என்னை கேட்கவில்லை. அதாவது ரணில் விக்கிரமசிங்கவும் என்னுடன் பேசவில்லை.

அது தொடர்பில் நான்கூறுவது இவைதான்.

தமிழ்த் தேசிய கட்சிகள் பெரும்பாலும் தேசிய அரசுடன் சேர்ந்து பயணிக்க விரும்புவது இல்லை. ஏனென்றால் எங்களின் தேவைகள் வேறு ,தேசிய கட்சிகளின் தேவை வேறு.ஆகவே நிபந்தனைகளுடன் ஆதரவை வழங்குவது அல்லது அது தொடர்பில் பரிசீலினை செய்வது என்றே நான் முன்பும் கூறியிருந்தேன்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, வடக்கு, கிழக்கில் பௌத்த மயமாக்கலை இல்லாது செய்தல், இராணுவத்தின் வெளியேற்றம் – இவ்வாறு பல நிபந்தனைகளுக்கு அவர் சம்மதம் தெரிவித்தால் – அதை எழுத்தில் உறுதிப்படுத்தினால் – அமைச்சரவையில் இருப்பது தொடர்பில் பரிசீலிக்கலாம் என்று கூறியிருந்தேன். ஆனால் நான் பதவி ஆசை பிடித்து அப்படிக் கூறினேன் என்பது போல பலரது கருத்துக்கள் வெளிவந்து கொண்டு இருக்கின்றன. எமது நிபந்தனை தொடர்பில் யாரும் வெளிப்படுத்தவில்லை. – என்றார் அவர்.

- - - - - - - - - - - - - - - -

## 'த ஹிந்து' செய்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் ஊடக நிலையத்தால் ஊடக வெளியீடு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அந்த ஊடக வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

எதிர்வரும் மே 18 ஆம் திகதி இலங்கை மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்துவதற்குத் திட்டமிட்டுள்ளனர் என இந்திய உளவுத் துறையை மேற்கோள் காட்டி இந்தியாவில் இருந்து வெளியாகும் 'த ஹிந்து' நாளிதழ் மே 13 ஆம் திகதி செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் செய்தி தொடர்பில் விசாரணை மேற்கொண்டபோது, இந்தத் தகவல்கள் பொதுவான தகவல்களாகவே வழங்கப்பட்டுள்ளன எனவும் இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு இலங்கைக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் இலங்கைக்கு அறிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் தேசியப் பாதுகாப்புத் தொடர்பாக உளவுத்துறை மற்றும் பாதுகாப்புப் படையினருக்குக் கிடைத்த அனைத்துத் தகவல்களும் முறையாக விசாரிக்கப்பட்டு உரிய பாதுகாப்புப் படையினருக்கு அறிவிக்கப்படும் என்பதுடன் நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.– என்றுள்ளது.

## முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தைக் கொண்டாடுவது தொடர்பில் சட்டத்தரணி ந.சிறீகாந்தா விடுத்துள்ள அறிக்கையின் முழு விவரம் வருமாறு:–

பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் நாடு சிக்கிச் சிறைப்பட்டிருக்கும் சூழ்நிலையில், நன்கறியப்பட்டிருக்கும் அரசியற் காரணங்களால் ஜனாதிபதியால் பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்க நெருக்கடி நிலைமையை வெற்றிகரமாகக் கையாள்வார் என்ற நம்பிக்கையோடு கூடிய எதிர்பார்ப்பு அரசியல் அரங்கில் மேலோங்கத் தொடங்கியுள்ளது.

அதே நேரத்தில் காலிமுகத்திடலில் தொடர்ந்து நடாத்தப்படும் ஜனநாயகப் போராட்டத்திற்கு அரசாங்கத்தினால் தடை எதுவும் இருக்க மாட்டாது என்ற புதிய பிரதமரின் உடனடியான அறிவிப்பு வரவேற்புக்குரியது என்பதற்கு அப்பால், அனுபவம் நிறைந்த அரசியல் ஆளுமையின் யதார்த்தபூர்வமானதோர் அணுகுமுறையாகவே அது மதிப்பிடப்பட வேண்டும்.

ஆனால், தமிழ் மக்களின் உணர்வுபூர்வமான வருடாந்த நிகழ்வான முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி எதிர்வரும் 18ஆம் திகதி மேற்கொள்ளப்படவுள்ள நிலையில், இந்த நிகழ்வுக்கு எதிராகக் கடந்த முறையைப் போலவே கெடுபிடிகளும் முட்டுக்கட்டைகளும் பாதுகாப்புப் படைகளால் உருவாக்கப்பட்டுக் கொண்டிருப்பது புதிய பிரதமரின் ஆரோக்கியமான அரசியல் அணுகுமுறைக்கு ஓர் பெரும் சவாலாக அமைந்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடந்த காலத்தில் சில முக்கியமான சந்தர்ப்பங்களில்தமிழர்தரப்பில்வெளிப்படுத்தப்பட்ட ஆதரவும் அனுசரணையும் நன்கறியப்பட்டவை.

ஆயினும், அவர் பிரதமராக இருந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் சில கசப்பான ஏமாற்றங்கள் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருந்த போதிலும், அவர் தொடர்பில் எதிர்மறையான கருத்துக்கள் காத்திரமாக நிலை கொண்டதில்லை.

இந்தப் பின்னணியில் காலிமுகத்திடலுக்கு ஒரு நீதி, முள்ளிவாய்க்காலுக்கு வேறு நீதி என்ற பாரபட்சமான பார்வை அவரிடம் இருக்கமாட்டாது என்றே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

எனவே நீதியான அணுகுமுறையை முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி விடயத்தில் கையாள்வதற்கு அவர் உடனடியாக முன்வர வேண்டும் என்று நாம் கோருகின்றோம்.

தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் தொடர்பில், முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி என்பது புதிய பிரதமருக்கு ஓர் அக்கினிப் பரீட்சையாகவே இருக்கும்.

அதில் அவர் தேறுவதோ அல்லது தவறுவதோ தமிழ் மக்களின் அரசியற் சிந்தனைகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியே தீரும் என்பதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.– என்றுள்ளது.

- - - - - - - - - - - - - - - -

## உலக வங்கி, ஆசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடுத்து மருந்து, உணவு உட்பட அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு உதவி அளிப்பதாக உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் பிரதமருக்கு உறுதியளித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் பிரதமர் தனது டுவிட்டர் தளத்தில் பதிவுகளை இட்டுள்ளார்.

வங்கிகளில் டொலருக்குப் பற்றாக்குறை நிலவுவதனால் அடுத்துவரும் வாரங்களுக்குத் தேவையான எரிபொருளைக்கொள்வனவுசெய்வதற்கான நிதியைப் பெறுவதற்கான மாற்று வழி

# யாழ். மாநகர சபையைக் கலைக்க நேரும் என்று ஆளுநர் எச்சரிக்கை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மே.16

ஆரியகுளத்தின் உள்ளே வெசாக் கூடுகளை அமைக்க அனுமதிக்காது விட்டா மாநகர சபையை உடன் கலைக்க வேண்டி நேரும் என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அச்சுறுத்தல் விடுத்துள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ். நகரில் உள்ள இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் விகாரைகளைச் சூழ வெசாக் கூடுகள் அமைக்கப்படுகின்றன.

இந்த நிலைமயில் யாழ்ப்பாணம் ஆரியகுளம் நாகவிகாரைக்கு முன்பாகவுள்ள ஆரியகுளத்தின் நடுவே வெசாக் கூடுகளை அமைக்க அனுமதிக்குமாறு படைத் தரப்பினால் நேற்றைய தினம் வாய்மூலம் கோரிக்கை விடப்பட்டபோது குளப்பகுதி கூறுவிலைகோரல் மூலம் பராமரிப்பிற்காக தனியாரிடம் வழங்கப்பட்ட நிலைமயில் சபையினால் நேரடியாக அதனை வழங்க முடியாது எனப் பதிலளிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தத் தகவலை ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதன் பின்னர் வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா மாநகர சபையின் ஆணையாளர் த.ஜெயசீலனைத் தொடர்பு கொண்டு உடன் அனுமதி வழங்கப்பட வேண்டும் அல்லது மாநகர சபையைக் கலைக்க வேண்டிய நிலைமை வரும் எனத் மெரிவித்தார் என்று அறிய வந்தது.

# முள்ளிவாய்க்கால் வரையிலான பேரணி பொத்துவிலில் நேற்று காலை ஆரம்பம்




(க.கிருபாகரன்)

இனவிடுதலை வேண்டி பொத்துவில் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையிலான மக்கள் பேரணி நேற்று அம்பாறை மாவட்டம் பொத்துவில்லில் ஆரம்பமானது.

இப்பேரணியை வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இப்பேரணி பொத்துவில்லில் ஆரம்பமாகி, திருக்கோவில், அக்கரைப்பற்று, காரைதீவு, கல்முனை, களுவாஞ்சிகுடி, ஆரையம்பதி, காத்தான்குடியூடாக கல்லடிப் பாலத்தை வந்தடைந்தது.

அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் மட்டக்களப்பு கல்லடிப் பாலத்திலிருந்து செங்கலடி, வாழைச்சேனை, வாகரையூடாகத் திருகோணமலை சிவன் கோவில் வளாகத்தைச் சென்றடையவுள்ளது.

17 ஆம் திகதி காலை திருகோணமலை சிவன் கோவில் வளாகத்திலிருந்து ஆரம்பமாகவுள்ள பேரணி வவுனியா ஊடாக முல்லைத்தீவைச் சென்றடையவுள்ளது.

இந்நிலையில் 18 ஆம் திகதி வடமாகாணத்திலிருந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் ஆரம்பிக்கப்பட்ட பேரணியுடன் இவர்கள் இணைந்து கொள்ளவுள்ளனர் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்பேரணியில் மதகுருமார்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

# சட்ட மறுசீரமைப்புக் குழுவின் தலைவராக சுமந்திரன் எம்.பி.

நாடாளுமன்றத்தின் கீழ் அமைக்கப்படும் சட்ட மறுசீரமைப்புக் குழுவுக்குத் தலைமை தாங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த கோரிக்கைக்கு தான் சம்மதம் தெரிவித்துள்ளார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொலைபேசியில் என்னைத் தொடர்புகொண்டு உரையாடினார்.

அரசுக்கு ஆதரவு வழங்குவீர்களா எனப் பிரதமர் கேள்வி எழுப்பினார். மக்கள் நலன்சார்ந்த மற்றும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக அரசு எடுக்கும் தீர்மானங்களுக்கு ஆதரவு வழங்குவதாக நான் பதிலளித்தேன் - என்றார்.

- - - - - - - - - - - - - - - -

களை ஆராய்ந்து வருகின்றோம்.

சமையல் எரிவாயுக் கப்பலுக்குரிய கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளன. கூடிய விரைவில் கப்பலிலிருந்து இறக்கப்பட்டு எரிவாயு விநியோகிக்கப்படும்.

21 ஆவது திருத்தம் தொடர்பில் நாளை(இன்று) சட்டமா அதிபர் திணைக்களத்தினருடன் கலந்துரையாடிய பின்னர் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக அது சமர்ப்பிக்கப்படும்.

செய்யவேண்டியனவும்செய்யாதவையும் நிறைய இருக்கின்றன. நாங்கள் பல விடயங்களுக்கு முன்னுரிமை அளித்து வருகின்றோம். முடிந்தவரை விரைவில் அவை தீர்க்கப்படும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம். கடந்த 48 மணிநேரத்தில் பல விடயங்களை நகர்த்த முடிந்தது. நாடு எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடி தொடர்பில் நாளை(இன்று) முழு விளக்கத்தையும் மக்களுக்கு வழங்கவுள்ளேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது டுவிட்டரில் பதிவேற்றியுள்ளார்.

## வடமராட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் நேற்று மாலை 4 மணியளவில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் பருத்தித்துறை நகர சபையின் தலைவர் யோ.இருதயராஜா, பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் அ.சா. அரியகுமார், பருத்தித்துறை நகர சபை உறுப்பினர்கள், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.சுகிர்தன் உள்ளிட்ட தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் உயிர்நீத்த உறவுகள் நினைவாக விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வின் இறுதியில் 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' வழங்கப்பட்டது.